# கோபுரம்

தகவல் இதழ்
பங்குனி - 1997



கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு.

## பொங்கல் விழா - நீர்கொழும்பு




நீர்கொழும்பில் நடைபெற்ற தைப்பொங்கல் விழாவில் கலாசார சமய அலுவல்கள் பிரதி அமைச்சர் பேராசிரியர் ஏ. வி. சுரவீர அவர்கள் சிறுவர்களுக்கு பரிசு வழங்குவதையும், கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். இராமகிருஷ்ணமிஷன் சுவாமி ஆத்மகனாநந்தா, திணைக்கள பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## விடுதிகள் திறப்புவிழா - விபுலானந்த இசைநடனக்கல்லூரி




திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசை நடனக்கல்லூரியின் அதிபர், மாணவர்களுக்கான புதிய கட்டிடங்களை மட்/இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஜீவானந்தா அவர்கள் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட மட்/பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜோசப் பரராஜசிங்கம், கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி. ஆர். கைலாசநாதன், கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைப் பீடாதிபதி திரு. எஸ். மௌனகுரு, திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். தெய்வநாயகம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

---

அட்டைப்படம் :

**சிற்பக்கலைப்படிவு ; நடனக்கலை வடிவு !**

இந்தியா, ஒரிஸ்ஸா மாநிலத்து முக்தேஸ்வரம் கோயிலின் தோரண வாயிலும், "ஒடிசி" நடனத்தோற்றமும். (A Journey Through India எனும் நூலிலிருந்து)

உ

# கோபுரம்

இந்துசமய, கலாசார
அலுவல்கள் திணைக்கள
வெளியீடு

மலர் - 08 இதழ் - 01

✣ 1997 ✣

தாது வருடம் - பங்குனி மாதம்

## உள்ளே .........


- ✣ திணைக்களச் செய்திகள்
- ✣ சூரிய நமஸ்காரமும் அதன் பலன்களும்
- ✣ சமய குரவர்களின் குருபூசைத்தினங்கள்
- ✣ அன்பே சிவம்.
- ✣ அன்னை சாரதா தேவியார்
- ✣ திருநீறு உருத்திராக்கம் திருவைந்தெழுத்தின் மகிமைகள்.
- ✣ சைவ ஆலயங்கள், மக்களின் சமூக நிலையங்களே !
- ✣ சித்தானைக்குட்டி சுவாமிகள்
- ✣ வாழ்ந்து பார்க்கலாம் வாருங்கள் !
- ✣ நினைப்பது முடியும் !
- ✣ சும்மா இருப்பது....!
- ✣ வெற்றியை நோக்கி....!
- ✣ அருள் கூட்டும் அறிவு ....!
- ✣ அறநெறி எது?


---

கோபுரம் இதழ் பற்றிய உங்கள் எண்ணங்களை கீழ் வரும் முகவரிக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.

பணிப்பாளர்,
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,
98, வோட் பிளேஸ்,
கொழும்பு - 7.

# திணைக்களச் செய்திகள்

# இலங்கைத் தமிழ்ப் பாரம்பரியக் கலை அரங்கு

திணைக்களத்தின் ஏற்பாட்டில் இலங்கைத் தமிழ்ப் பாரம்பரியக்கலை அரங்கு நிகழ்ச்சி ஒன்று டிசம்பர் மாதம் 22ம்திகதி மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு கிழக்குப் பல்கலைக்கழக வருகைப்பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

கலையரங்கு நிகழ்ச்சிகள் கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திருமதி கைலாசநாதன் தலைமையில் நடைபெற்றது. கொழும்பு - 2 சைவமுன்னேற்ற நால்வர் சமய பாடசாலை மாணவியரின் தமிழ் வாழ்த்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தொடக்கவுரை நிகழ்த்தினார். திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா அறிமுகவுரை வழங்கியதோடு நிகழ்ச்சியையும் நெறிப்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியின் போது கொட்டகலை சமூக சேவைகள் மன்றத்தின் மங்கள இசை, நோர்த் மாத்தளை கோவிந்தன் குழுவினரின் மலையகத்தின் **பபூன், கட்டியக்காரன்** கோமாளி, உடப்பு சோமஸ்கந்தர் குழுவினரின் **அம்பா பாடல்**, புசல்லாவ துரைசாமி நடராஜா குழுவினரின் **மலையக தெம்மாங்கு உடுக்கிசை**, கொட்டகலை சமூகசேவை மன்றத்தினரின் **தப்பு இசை**, திரு. அந்தனி ஜீவா நெறியாள்கையில் கண்டி கலைஞர்கள் வழங்கிய **காமன் கூத்து** ஜனாப் சாலி அவர்களின் நெறியாள்கையில் களுத்துறை தொட்டவத்தை முற்போக்கு முஸ்லிம் கலாசார குழுவினர் வழங்கிய **கழிகம்பாட்டம்** திரு. வி. ரி. தர்மலிங்கம், திரு. எம். நெடுஞ்செழியன் ஆகியோரின் நெறியாள் கையில் தலவாக்கலை, கலை கலாசார கழகத்தினரின் **இராமர் கதை** திரு. அருணா செல்லத்துரையின் **நந்தி உடையார் கூத்து** ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இவ்வரங்கின்போது கொழும்பு கவின் கலை மன்றம், மாத்தளை கலைவாணி நாடக மன்றம், சிலோன் யுனைட்டட் ஆர்ட் ஸ்டேஜ், வெள்ளி நிலா கலாலயம், மலையக கலை இலக்கியப் பேரவை, புதிய அலைகலை வட்டம், மலையாள கலாலயம், கிருஷ்ண கலாலயம், புத்தளம் மறுமலர்ச்சிக் கலா மன்றம், இலங்கை தேசிய கலாநிலையம் ஆகிய நாடக மன்றங்களுக்கும் பிரபல கலைஞர்களான கே. சோமசுந்தரம், கிங்ஸ்லி எஸ். செல்லையா, மாத்தளை கேசவன், கோவிந்தன், ஏ. சி. எம். ஹுசைன் பாரூக், எம். உதயகுமார், கே. ஏ. ஜவாஹர், திருமதி மணிமேகலை இராமநாதன், விசுவநாதராஜா ஆகிய கலைஞர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்களை பேராசிரியர் கா. சிவத்தம்பி, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தில்லை நடராஜா, திருமதி கைலாசநாதன், திருமதி சாந்தி நாவுக்கரசன், திரு. வீ. விக்கிரமராஜா ஆகியோர் வழங்கினர்.

# இலங்கைத் தமிழ்ப் பாரம்பரியக் கலை அரங்கு



இலங்கைத் தமிழ்ப் பாரம்பரியக் கலையரங்கு நிகழ்ச்சியினை பேராசிரியர் கா. சிவத்தம்பி,
உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா, பதில்பணிப்பாளர் திருமதி. ஆர். கைலாசநாதன்,
பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், கிளிநொச்சி அரச அதிபர்
திரு. எஸ். தில்லை நடராஜா ஆகியோர் ரசிப்பதையும்,
மலையக காமன்கூத்து நிகழ்ச்சியின் ஒரு அம்சத்தையும் படத்திற் காணலாம்.

---

# இந்துக் கலைக் களஞ்சியம் தொகுதி iii, கதிரைமலைப்பள்ளு, ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு நூல்களின் வெளியீடு

**தி**ணைக்கள நூல்களான இந்துக் கலைக்களஞ்சியம் தொகுதி iii, கதிரைமலைப்பள்ளு, ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு ஆகிய நூல்களின் வெளியீட்டு வைபவம் கடந்த டிசம்பர் மாதம் 27ம் திகதி மாலை திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திருமதி ஆர். கைலாசநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு கலாசார சமய அலுவல்கள் பிரதி அமைச்சர் பேராசிரியர் ஏ. வி. சுரவீர அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியின் போது நல்லை ஆதீன குருமுதல்வர் ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், வேதாகமக்கிரியா சூடாமணி பரமேஸ்வரக் குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினர்.

இந்துக் கலைக்களஞ்சியத்தின் பதிப்பாசிரியர் குழுத்தலைவரான பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்.

திணைக்களத்தின் மூலம் மீளப் பதிப்பித்து வெளியிடப்பட்ட கதிரை மலைப் பள்ளு, ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு ஆகிய நூல்களின் அறிமுகவுரையை முறையே பேராதனை பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி துரை. மனோகரன் அவர்களும், பண்டிதர் கா. செ. நடராஜா அவர்களும் வழங்கினர்.

பிரதியமைச்சரிடம் இருந்து நல்லை ஆதீன முதல்வர், பிரம்மஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள்,சிவநெறிச்செல்வர் தி. செந்தில்வேள், திருமதி சிவானந்தினி துரைசுவாமி ஆகியோரும் நூலாக்கக் குழுவினரும் முதற் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

திணைக்கள பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அறிமுகவுரையும், உதவிப் பணிப்பாளர் திரு.எஸ். தெய்வநாயகம் நன்றியுரையும் வழங்கினர். இந்நிகழ்ச்சியை திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா நெறிப்படுத்தினார்.

# இந்துக் கலைக்களஞ்சியம் தொகுதி iii வெளியீடு

✣✣✣✣✣✣✣✣✣✣✣✣





இந்துக் கலைக்களஞ்சியம் தொகுதி மூன்று, ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, கதிரைமலைப்பள்ளு ஆகிய நூல்களை கலாசார சமய அலுவல்கள் பிரதி அமைச்சர் பேராசிரியர் ஏ. வீ. சுரவீர அவர்கள் வெளியிட்டு வைத்தார். பேராசிரியர் சி. பத்மநாதன், கலாநிதி துரை. மனோகரன், திருமதி சாந்தி நாவுக்கரசன், நல்லை ஆதீன முதல்வர், சிவஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள், கூட்டத்தின் ஒரு பகுதியினர் ஆகியோரைப் படத்திற் காணலாம்.

நம்முடைய காரியங்களே நமக்குப் பலன்களையும் தருகின்றன. ஒவ்வொரு காரியமும் அதற்குரிய விளைவைத் தானே உண்டாக்கிக்கொள்கிறது.

**தி**ணைக்களம் ஒழுங்கு செய்து நடத்திய இலக்கியச் சொற்பொழிவு நிகழ்ச்சி ஒன்று ஜனவரி மாதம் 3ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை வெள்ளவத்தை இராம கிருஷ்ண மிஷன் சிறிய மண்டபத்தில் நடைபெற்றது.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தலைவர் திரு. செ. குணரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு தஞ்சாவூர் பல்கலைக்கழக முன்னாள் உப வேந்தர் பேராசிரியர் ஔவை நடராஜன் அவர்கள், **கம்பனும் இளங்கோவும் ஓர் ஒப்பியல் நோக்கு** எனும் பொருளில் சிறப்புரை நிகழ்த்தினார்.

## கம்பனும் இளங்கோவும்

கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி ஆர். கைலாசநாதன், திணைக்கள பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், ஆசியோர் உட்பட பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

## வீட்டில் பூஜை

**பூ**ஜை, ஜபம் ஆகியவை வீட்டில் நடப்பதால் வீட்டின் சூழ்நிலையே மேன்மை அடைகிறது. குடும்பத்தார் அனைவருமே அந்த நற்பலனைப் பெறுகிறார்கள். இதில் மனம் ஊன்றி ஈடுபட்டால் அறிவுக் கூர்மையும், சிந்தனையில் ஆழமும் கிடைக்கிறது. இதற்குக் குழந்தைகள் கட்டாயமாகப் படிக்க உட்காருவதைப்போல, நாமும் நேரம் ஒதுக்கிக்கொண்டு உட்கார வேண்டும்.

நோயாளிக்குப் பிடித்தாலும், பிடிக்கா விட்டாலும் மருந்து தனது வேலையைச் செய்கிறது. நோயாளி குணம் அடைகிறான்.

அதேபோல் நாம் மனம் ஊன்றி இதில் ஈடுபடா விட்டாலும் அதன் பலன் நம்மை மெல்ல மெல்ல வந்தடையத்தான் செய்யும். அதனால் மனம் பண்படும். அதன் பயனாக பூஜையிலும் ஜபத்திலும் மேலும் ஈடுபாடு உண்டாகும். இப்படிப் பிடிவாதமாக மனத்தை வசப்படுத்தி ஈடுபடுத்தக் கற்றுக் கொண்டால், படிப்படியாக மனோபலம் அதிகரிக்கும். எந்தக் காரியத்தையும் செய்வதற்கு மனோ தைரியமும், விடாமுயற்சிக்குத் தேவையான உறுதியும் தன்னாலே வரும்.

வாழ்க்கையில் வெற்றி பெற்றுச் சிறந்து விளங்குவீர்கள்.

— ஆனந்தமயி அம்மையார்

எதை நினைத்து நாம் ஆசைப்படுகின்றோமோ அதன் சுபாவம் நமக்கும் வந்து சேரும்.ஆசைகளில் உன்னதமானது கடவுள் பக்தியே.

# கர்நாடக இசைக் கச்சேரி

திணைக்களம் ஏற்பாடு செய்து நடத்திய கர்நாடக இசைக்கச்சேரி நிகழ்ச்சியொன்று ஜனவரி 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழக சங்கீத வித்துவான் திருமதி குலபூஷணி கல்யாணராமன், யாழ் பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் திரு. சி. பத்மலிங்கம் ஆகியோரின் இசைக்கச்சேரிகள் இடம்பெற்றன.

பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் திரு. விநாயகமூர்த்தி, மிருதங்கம் அ. ரவீந்திரன், கஞ்சிரா திரு. ரி. ஜெயசுந்தரம், தம்புரா ஏ. கோவிந்தராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளரும், திணைக்கள பதில் பணிப்பாளருமான திருமதி ஆர். கைலாசநாதன் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தொடக்கவுரையும், உதவிப்பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் நன்றியுரையும் நிகழ்த்தினர்.

******

# உடப்பில் பொங்கல்விழா

இந்து சமய கலாசாரத் திணைக்களமும், வடமேல் மாகாண கலை கலாசார ஒன்றியமும் இணைந்து நடத்திய பொங்கல் பெருவிழா ஜனவரி மாதம் 14 ஆம் திகதி வில்லிசைக் கலைஞர் உடப்பூர் பெ. சோமாஸ்கந்தர் தலைமையில் உடப்பில் நடைபெற்றது.

அன்று காலை ஆண்டிமுனை முத்துமாரியம்மன் தேவஸ்தானத்திலிருந்து அறநெறித்தீபம், மரபுப்பாடல்கள், மங்கள வாத்தியத்துடன் ஊர்வலமாகப் புறப்பட்டது. காளியம்மன் கோவிலிலிருந்து பொங்கல் பானை ஊர்வலமும் அத்துடன் இணைய ருக்மணி சத்தியபாமா பார்த்தசாரதி கோவிலை வந்தடைந்தது.

ஆலய முன்றலில் 108 பெண்கள் பொங்கல் வைத்து பூசை செய்தனர். அன்று மாலை கோலப்போட்டி, படகோட்டப்போட்டி என்பனவும், கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. நிகழ்ச்சிகளில், பிரதேசத்தின் தனித்துவத்தைக் காட்டும் முளைக்கொட்டு, இசை நாடகப் பாடல்கள், அம்பா பாடல், கோலாட்டப்பாட்டு என்பன இடம்பெற்றன. அத்துடன் சடுகுடு, வாரடித்தல், கிளித்தட்டு ஆகிய விளையாட்டுக்களும் இடம்பெற்றன. பண்டிதர் கா. செ. நடராஜா, எழுத்தாளர் நா. சோமகாந்தன் ஆகியோரின் சிறப்புரையும் இடம்பெற்றது.

நிகழ்ச்சியின் போது உடப்பு கலைஞர்கள், திணைக்களத்தால் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். உடப்பு மீன்பிடிச்சங்கங்கள் உட்பட ஆலய பரிபாலன சபையினர் வித்தியாலய அதிபர்கள், ஆசிரியர்கள் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், நாடக மன்றங்கள், பொதுமக்கள் பலரும் முன்னின்று நடத்திய இவ்விழாவிற்கு கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திருமதி. ஆர். கைலாசநாதன், திணைக்கள பிரதிப்பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

விழாவிற்கான நிகழ்ச்சிகளை கலாசார அலுவலர் திரு. மாத்தளை பி. வடிவேலன், கலை கலாசார ஒன்றியத் தலைவர் திரு. அ. கனகரத்தினம், ஆண்டிமுனை தமிழ் வித்தியாலய அதிபர் திரு. பெ. சண்முகநாதன், ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

ஆயிரக்கணக்கான பெண்கள் கலந்துகொண்ட முளைக்கொட்டு நிகழ்ச்சியினையும், ஏனைய கலை நிகழ்ச்சிகளையும் உடப்பு சோமஸ்கந்தர் வில்லிசைக்குழுவினர் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை
### களுத்துறை

திணைக்களத்தின் அநுசரணையோடு களுத்துறை மாவட்ட இந்து இளைஞர் மன்றம் ஏற்பாடு செய்திருந்த களுத்துறை மாவட்ட இந்து இளைஞர்களுக்கான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை நிகழ்ச்சி ஒன்று ஜனவரி 11ம் திகதி களுத்துறை குளோடன் தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. வீ. விக்கிரமராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு பிரதிப்பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

தமிழ்நாடு கன்னியாகுமரி, சுவாமி விவேகானந்த கேந்திர நிலைய செயலாளர் திரு. என். கிருஷ்ணமூர்த்தி பட்டறையை நடத்தினார்.

இந்நிகழ்ச்சியை களுத்துறை இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு. என். ரி. சதாசிவம் நெறிப்படுத்தினார்.

தெரணியகலை மாவட்ட இந்து மன்றப்பொறுப்பாளர் திரு. என். இரவிக்குமார், ஹொரணை மாவட்ட இந்து மன்றப்பொறுப்பாளர் திரு. என். சிவகணேசமூர்த்தி ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

நிகழ்ச்சிகளுக்கான ஒழுங்குகளை கலாசார அலுவலர் திருமதி. நிர்மலா கருணானந்தராஜா அவர்கள் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறை
### கண்டி

திணைக்களத்தின் ஏற்பாட்டில், கண்டி இந்து இளைஞர் மன்றம் ஒழுங்கு செய்து நடத்திய இந்து இளைஞர்களுக்கான ஒரு நாள் தலைமைத்துவப் பயிற்சி ப்பட்டறை ஒன்று ஜனவரி மாதம் 12ம் திகதி கண்டி ஸ்ரீ மீனாட்சி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

கலாசார உத்தியோகத்தர் செல்வி இராஜேஸ்வரி முத்துசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

தமிழ்நாடு கன்னியாகுமரி ஸ்ரீ விவேகானந்த கேந்திர நிலையச் செயலாளர் திரு. என். கிருஷ்ணமூர்த்தி இப்பட்டறையை நடத்தினார்.

இப்பட்டறையில் கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய பிரதேசங்களைச்சேர்ந்த இந்து இளைஞர்களும் உயர்வகுப்பு இந்து மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்சியின்போது கண்டி இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு. ஏ. தட்சணாமூர்த்தி வரவேற்புரையும், செயலாளர் திரு. என். சுந்தரமூர்த்தி நன்றியுரையும் நிகழ்த்தினர்.

மறப்பது என்பதை, கடவுள் மனிதனுக்கு வரப்பிரசாதமாகக் கொடுத்திருக்கின்றார்.
"மறதி" என்ற நிலை இல்லையென்றால் மனிதர்கள் பைத்தியக்காரர்களாகவே இருப்பார்கள்.

# நீர்கொழும்பில் தைப்பொங்கல் விழா

நீர்கொழும்பு இந்துஇளைஞர் மன்ற அனுசரணையுடன் இந்துசமய, கலாசாரத் திணைக்களம் நடத்திய தைப்பொங்கல் விழா மேற்படி மன்ற மண்டபத்தில் ஜனவரி மாதம் 18 ஆம் திகதி நடைபெற்றது.

அன்றுகாலை விசேட பூஜை பாரம்பரியக்கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் என்பன இடம்பெற்றன. பிற்பகல் வி. கே. பஞ்சமூர்த்தி குழுவினரின் மங்கள இசைக்கச்சேரி இடம்பெற்றது.

மாலை நிகழ்ச்சிகள் மன்றத்தலைவர் திரு. அ. மயில்வாகனம் ஜே. பி. அவர்கள் தலைமையில் ஆரம்பமாகின.

பிரதம விருந்தினராக கலாசார சமய அலுவல்கள் பிரதி அமைச்சர் பேராசிரியர் ஏ. வி. சுரவீர அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக வெள்ள வத்தை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தா, ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தா, நீர்கொழும்பு நகர முதல்வர் திரு. நிகலஸ் பெர்ணான்டோ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

திணைக்களத்தின் சார்பில் பிரதிப் பணிப்பாளர் திருமதி. சாந்திநா வுக்கரசன், உதவி ப்பணிப்பாளர்களான திரு. வி. விக்கிரமராஜா, திரு. குமார்வடிவேல், கலாசார உத்தியோகத்தர் திருமதி. நிர்மலா கருணா னந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மாலை நிகழ்ச்சிகள் உதவிப் பணிப்பாளர் திரு. குமார்வடிவேல் அவர்களின் அறிமுகவுரையுடன் ஆரம்பமாகின. தொடர்ந்து மன்றத்தலைவர் திரு. அ. மயில்வாகனம் ஜே. பி. தலைமையுரை நிகழ்த்தினார்.

"பொங்கும் மங்களம் எங்கும் தங்குக" என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கிற்கு தமிழ்மணி திரு.நா. தர்மராஜா அவர்கள் தலைமைதாங்கினார். இக்கவியரங்கில் நீர்கொழும்பைச்சேர்ந்த திரு. எம். முத்துலிங்கம், திரு. என். தர்மலிங்கம், வீரகேசரி துணை ஆசிரியர் திருமதி. அன்னலட்சுமி இராஜதுரை, இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன அறிவிப்பாளர் திரு. இ. தயானந்தா ஆகிய கவிஞர்கள் பங்குகொண்டு சிறப்பித்தனர். "தமிழர் பண்பாட்டில் தைத்திருநாள்" எனும் தலைப்பில் வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன் அவர்கள் உரையாற்றினார். இதனைத் தொடர்ந்து கலாஜோதி திருமதி. வனஜா ஸ்ரீநிவாசன் அவர்களின் இன்னிசை விருந்து நடைபெற்றது.

செல்வி. நந்தினி சிவசுப்பிரமணியம், நளாயினி இராசையா ஆகியோர் நெறியாள்கையில் நடனங்கள் இடம்பெற்றன. திரு. இரா. ஜெகஜோதி நெறியாள்கையில் நாட்டிய நாடகம் இடம்பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு வைபவ நிகழ்ச்சிகளில் கலாசார சமய, அலுவல்கள் பிரதி அமைச்சர் ஏ. வி. சுரவீர, இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு. வி. விக்கிரமராஜா ஆகியோர் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிச் சிறப்பித்தனர். இறுதி நிகழ்வாக நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றச் செயலாளரின் நன்றியுரை இடம்பெற்றது.

# கர்நாடக இசைக்கச்சேரி




இன்னிசைக்கச்சேரி நிகழ்ச்சியில் திரு. சி. பத்மலிங்கம், சங்கீத வித்துவான் திருமதி. குலபூஷணி கல்யாணராமன் ஆகியோர் கச்சேரி நிகழ்த்துவதையும் பார்வையாளர்களில் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு. குமார்வடிவேல் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## அரச இலக்கியப் பரிசுகளுக்குத் தமிழ் நூல்கள்

அரச இலக்கிய விழாவையொட்டி 1996ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசளிக் கப்பட விருக்கிறது. இதற்கான விண்ண ப்பங்கள் கோரப்படுவதாக தமிழ்க் கலைக்குழு அறிவித்துள்ளது.

பின்வரும் துறைகளைச் சார்ந்த நூல்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், சிறுவர் இலக்கியம், மொழி பெயர்ப்பு இலக்கியம், தமிழ் மொழி, இலக்கியம் சார்ந்த நூல்கள்.

இதற்கு நூல்கள் அனுப்ப விரும்பும் ஆசிரியர்கள் இதற்கான விண்ணப்பப்ப டிவத்தை நேரில் அல்லது முத்திரை யொட்டிய சுயமுகவரியிடப்பட்ட தபாலுறை ஒன்றை இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

பரிசுத்தேர்வில் பங்குகொள்ள விரும்புவோர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் நூலின் ஐந்து பிரதிகளையும் அஞ்சல் மூலம் அல்லது நேரடியாக அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

ஏப்ரல் மாதம் 15ம் திகதி விண்ணப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் கடைசித் திகதியாகும். மே மாதம் 05ஆம் திகதி விண்ணப்பங்களுடன் நூல்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்தினமாகும்.

# வவுனியாவில் மகா சிவராத்திரி

வவுனியா கோவில் குளம், அகிலாண்டேஸ்வரர் கோவில், இந்துசமய கலாசாரத் திணைக்களம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழச் சேவை என்பன இணைந்து நடத்திய மகா சிவராத்திரி விழா நிகழ்ச்சிகள் மார்ச் மாதம் 7ஆம் திகதி மேற்படி ஆலய மண்டபத்தில் இடம்பெற்றன.

அன்றைய தினம் நான்கு காலப் பூஜை, வசந்தமண்டபப் பூஜை, தீர்த்தோற்சவம், என்பன சிறப்பாக இடம்பெற்றன.

அத்துடன் வவுனியா இந்துக்கல்லூரி மாணவர்களின் இன்னிசை, மத்திய மகாவித்தியாலய மாணவர்களின் பண்ணிசை, சைவப் பிரகாச மகளிர் கல்லூரி மாணவியரின் "தாருகாவனம்" நாட்டிய நாடகம், திருகோணமலை செல்வன் விக்னேஸ்வரன் குழுவினரின் சிவகானம், குருமண்காடு பரதஷேத்திரம் வழங்கிய சிவ தாண்டவம், செல்வி தீபா இராமசுவாமியின் பரதம், செல்விகள் துவாரதி, கோபிகா கனகேஸ்வரன் சகோதரிகளின் இன்னிசைக்கச்சேரி என்பனவும் இடம்பெற்றன.

தமிழ் மணி அகளங்கன், தமிழருவி த. சிவகுமாரன் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெற்றன.

அருட்கலைத்திலகம் டாக்டர் சிவ அன்பு அவர்களின் "கண்ணப்ப நாயனார்" கதாப்பிரசங்கமும் இடம்பெற்றது.

நிகழ்ச்சிகளை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வானொலியில் நேரடி அஞ்சல் செய்தது. திணைக்களத்தின் சார்பில் உதவிப்பணிப்பாளர் திரு குமார் வடிவேல், பதில் பணிப்பாளர் திருமதி. கைலாசநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

## பதினோராம் ஆண்டு மாணவர்களுக்கு இந்து சமய பாடப்பரீட்சை

திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலைகளில் பதினொராம் ஆண்டில் சமய பாடம் பயிலும் மாணவர்களுக்கென பரீட்சை ஒன்றை நடாத்த திணைக்களம் ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது. எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள இப்பரீட்சை தொடர்பாக அறநெறிப் பாடசாலை நடத்தும் சமய நிறுவனங்கள், ஆலயங்கள் என்பனவற்றுக்கு திணைக்களத்தின் மூலம் அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றுநிருபம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மிருகத்தைப்போலவே இருந்துவிட நினைப்பவர்களுக்கும், மனிதனாய் இருந்தும் மிருக சுபாவம் இருப்பவர்களுக்கும் மதம் தேவைப்படுவதில்லை.

# சுவாமி விபுலானந்த இசைநடனக்கல்லூரி அதிபர், மாணவர் விடுதிகள் திறப்புவிழா

சுவாமி விபுலானந்த இசைநடனக் கல்லூரி அதிபர், மாணவர்களுக்கான விடுதிகள் மார்ச் 14ம் திகதி வெள்ளிக்கிழமை சுபவேளையில் திறந்து வைக்கப்பட்டன.

இவ்விடுதி திறப்பு விழாவில் கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச்செயலாளர் (இந்து விவகாரம்) திருமதி. ஆர் கைலாசநாதன் பிரதம அதிதியாகக்கலந்து கொண்டார்.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஜீவானந்தஜி, மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஜோசப் பரராஜசிங்கம், மாநகர மேயர் செழியன் ஜே. பேரின்பநாயகம், கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைப்பீடாதிபதி கலாநிதி எஸ். மௌனகுரு, கட்டிடத் திணைக்கள பொறியியலாளர் திரு. கே. வேல்மாணிக்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இவ்விடுதிகளுக்காக ஒரு கோடி ரூபாய் வரை செலவு செய்திருந்தது. மாணவர்களின் நீண்டநாள் பிரச்சனை களில் ஒன்று தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. 100 மாணவிகள் தங்கி இருந்து படிக்கக்கூடிய சகல வசதிகளும் கொண்ட விடுதியாகவும் அதிபருக்குரிய விடுதியாகவும் இவ்விரு விடுதிகளும் காட்சியளிக்கின்றன.

## அறநெறிப்பாடசாலை ஆசிரியர் கருத்தரங்கு
## திருகோணமலை





கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

திருமலையில் நடைபெற்ற கருத்தரங்கினை திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. வி. விக்கிரமராஜா அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பதையும், உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். குமார் வடிவேல், கலாசார அலுவலர் திரு. எஸ். மகேந்திரராஜா, இளைஞர் பேரவைப் பொதுச்செயலாளர் திரு. எஸ். சிவபாதசுந்தரம், பண்டிதர் இ. வடிவேல் ஆகியோரையும், கலந்து கொண்ட ஆசிரியர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

# மட்டக்களப்புச்

## செய்திகள்

✤ புதுமுகத்துவாரம் விபுலானந்த அறநெறிப் பாடசாலையின் 6வது வருடாந்த பரிசளிப்புவிழா ஜனவரி மாதம் 26ம் திகதி நடைபெற்றது. மன்றத்தலைவி திருமதி பாக்கியராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சுவாமி ஜீவனாந்தாஜி மஹராஜ் அவர்கள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்.

ஈழத்திருச்செந்தூர் ஆலய நிர்வாகி சுவாமி சர்வானந்தா, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் செல்வி. க. தங்கேஸ்வரி, எழுத்தாளர் அன்புமணி, ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். அறநெறிப்பாடசாலை மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

✤ புதூர் இந்து இளைஞர் மன்ற அறநெறிப்பாடசாலையின் பரிசளிப்புவிழா கடந்த பெப்ரவரி மாதம் 16ம் திகதி மன்றத் தலைவரின் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கலாசார உத்தியோகத்தர் செல்வி. க. தங்கேஸ்வரி இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் அறநெறிப்பாடசாலை நடத்திய போட்டிகளிற் முதல் மூன்று பரிசுகள் பெற்றோருக்கும், பாடசாலை புலமைப்பரிசில் பெற்றோருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

**தகவல் - கலாசார அலுவலர்**
**மட்டக்களப்பு**

## வானொலியும் மந்திரமும் !

நம்மைச் சூழ்ந்துள்ள வான் மண்டலத்தில், பல வானொலி நிலையங்களிலிருந்து ஒலிபரப்பாகும் இசை வடிவங்கள் நிறைந்திருக்கின்றன. ஆனால் அவை எதுவுமே நம்முடைய காதில் விழுவதில்லை. அவை நம்மைச் சூழ்ந்திருப்பதையும் நாம் உணருவதில்லை. ஆனால் நம்முடைய மனத்துக்கு இனிய இசை வேண்டுமானால் நாம் என்ன செய்கிறோம்? ஆங்கிலேய இசை, வாய்ப்பாட்டு, வீணை, திரைப்பட இசை என்று நமக்கு வேண்டியதற்கு ஏற்ப வானொலியின் அலை அளவைத் திருப்பி வைக்கிறோம். அதற்கேற்ப அந்த நிலையத்தில் இருந்து அந்த இசை கேட்கிறது. இந்த இசை கேட்பதற்கு, இதை நாம் சரியாக வைக்கவில்லையானால், வானொலிப்பெட்டி இருந்தும் பயன் இல்லை !

அதே போலக் கடவுள் நம்மைச் சுற்றி நிறைந்திருக்கிறார். அவரை உணர நாம் விரும்புகிறோம். அவரிடம் குறிப்பிட்ட வேண்டுகோளைச் சொல்லவும் விரும்புகிறோம். அப்போது அதற்கேற்ற மந்திரத்தைத் தேர்ந்து சொல்லுகிறோம். இந்த மந்திரம் அதற்காக உருவாக்கப்பட்டது; அது சக்தி நிறைந்தது; அதனால் அதை சரியாகச் சொன்னால் பலனும் கிடைக்கிறது. அங்கே யந்திரம் - இங்கே - மந்திரம் ! உங்கள் மனம் என்னும் வானொலிப்பெட்டியை பழுதில்லாமல் வைத்துக்கொள்ளுங்கள். அமைதியான சூழ்நிலையில் அன்பு நிறைந்த உள்ளத்துடன் மந்திரங்களைச் சொல்லுங்கள். அதன் பயனும் வந்து சேரும் - உங்களுக்கு, உங்களைச் சார்ந்தவர்களுக்கு, உங்கள் சமூகத்துக்குங் கூட !

**- பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா -**

# திருகோணமலைச் செய்திகள்

✤ இலங்கை இந்து இளைஞர் பேரவையினரால் "இந்து இளைஞன்" எனும் செய்தி இதழ் மார்ச் மாதம் 7ம் திகதி மாலை பேரவை அலுவகத்தில் வெளியிட்டுவைக்கப்பட்டது.

பேரவைத் தலைவர் திரு. வ. முருகப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் இறைபணிச் செம்மல், திரு.பொ.கந்தையா, ஞான சிரோன்மணி, பண்டிதர் இ. வடிவேல் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

திருகோணமலை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

நகராட்சி மன்றத்தலைவர் திரு. பெ. சூரியமூர்த்தி முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். பேரவைச் செயலாளர் திரு. செ. சிவபாதசுந்தரம் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

✤ ஸ்ரீமுருகன் தொண்டர் சபையின் ஆதரவோடு மகா சிவராத்திரி விழா மார்ச் 7ம் திகதி வில்லூன்றிச் கந்தசுவாமியார் கோயிலில் சிறப்பாக இடம்பெற்றது.
இந்நிகழ்வுக்கு ஸ்ரீமுருகன் தொண்டர் சபைத் தலைவர் திரு. க. மகாலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினார்.

சிவஸ்ரீ சிவ சுரானேந்தேஸ்வர சர்மா அவர்கள் ஆசியுரை வழங்கினார். கூட்டுப்பிரார்த்தனை அருணகிரிநாதர் அறெநறிப்பாடசாலை மாணவர்கள் நடத்தினர். செல்வி. யோ. சத்தியவாணி, மகாசிவராத்திரி என்ற தலைப்பில் பேசினார். திரு. சி. மகேந்திரராஜாகலாசார உத்தியோகத்தர் அவர்கள் சிறப்புச்சொற்பொழிவு ஆற்றினார். பக்திப்பாடலை நிருத்தகீதாலய மாணவிகள் நடத்தினர். மற்றும் பேச்சுக்கள், பக்திப்பாடல்கள், நடனம், உரைச்சித்திரம் என்பன இடம்பெற்றன.

ஸ்ரீமுருகன் தொண்டர் சபைச் செயலாளர் திரு. ந. செல்வஜோதி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

✤ 20/ 03/ 1997 ம் திகதி வியாழக்கிழமை அன்று திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் மகேஸ்வரி மண்டபத்தில் யோகர் சுவாமி அவர்களின் குருபூஜைத்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. திருகோணமலை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திரு. சி. மகேந்திரராஜா அவர்கள் இப்பூஜைக்கு தலைமை தாங்கினார். "சிவயோக சுவாமிகளின் சித்தாந்தம்" என்ற தலைப்பில் வைத்தியப் பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

தட்சணகான சபா மாணவியர் "திருமுறையும் நற்சிந்தனைப் பாராயணமும்" என்னும் விடயத்தை வழங்கினார்கள். சிவஞானச்செல்வர், திரு. செ. சிவபாதசுந்தரம் நன்றியுரை வழங்கினார்.

தகவல் - கலாசார அலுவலர்
திருகோணமலை.

கடவுளை நம்பி உங்களை ஒப்படையுங்கள்.

உங்கள் திறமையை நம்பி மனந்தளராமல் செயற்படுங்கள் !

# வவுனியா மாவட்டத்தில் அறநெறிக் கல்வி

சமுதாய மக்களின் மேம்பாட்டிற்கு அறநெறிக்கல்வி சிறுவயது முதல் புகட்டப்பட வேண்டும் என்பது அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு கொள்கையாகும். அரசாங்க பாடவிதானத்திற்கு மேலதிகமாக சமய அறிவையும் நற்பண்புகளையும், ஒழுக்கத்தையும் இளம் சிறார்களிடத்தில் வளர்க்கும் நோக்கத்தை அறநெறிப் பாடசாலைகள் கொண்டிருத்தல் வேண்டும். இந்த சமுதாயப் பணியை ஆலயங்கள், இந்து சமய நிறுவனங்கள் என்பன நடைமுறைப்படுத்துகின்றன. இதற்கு அடி கோலிய இந்துசமய கலாசாரத் திணைக்களம் தனது செயற்பாடாக அறநெறிச் கல்வியை முன்னெடுத்துச் செல்கின்றது.

திருமதி. செ. தி. ஜெ. தேவேந்திரன்.
கலாசார உத்தியோகத்தர்

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் ஆலயங்கள் தோறும் அறநெறிப்பாடசாலைகள் அமைக்கப்படா விட்டாலும் 20 அறநெறிப் பாடசாலைகள் அமைக்கப்பட்டு அவற்றில் 18 பாடசாலைகள் இந்து சமய கலாசார திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டு நடைமுறையில் உள்ளன. இந்தப் பதினெட்டுப்பாடசாலைகளும் அவ்வக் கோயில்களின் ஆலய பரிபாலன சபையின் மேற்பார்வையிலும், ஆசிரியர்களின் சேவையிலும் புத்துயிர் பெற்று வளர்ந்து வருகின்றன.

சில பாடசாலைகள் காலத்தின் சாதக பாதக நிலைமைகளுக்கேற்ப சில வேளைகளில் இயங்க முடியாத சந்தர்ப்பங்களும் இல்லாமல் இல்லை. அத்துடன் மருத நிலை இயற்கையும் கூட மாரிகாலத்தில் பாடசாலைகளின் நடைமுறைக்கு குந்தகம் விளைவிக்கின்றது.

அறநெறிப்பாடசாலைகளின் வளர்ச்சியில் இந்து சமய அறிவையும், சமய உணர்ச்சியையும் விருத்தி செய்து சமயப் பண்பாட்டு விழுமியங்களை அறிந்து கொள்ள வழி செய்யும் பணியில் இந்து சமய கலாசார திணைக்களம் தனது பங்களிப்பைப் பூரணமாக வவுனியா மாவட்டத்திற்குச் செலுத்தியுள்ளது என்பதில் நாம் பெருமைப்பட வேண்டும். தனது இந்த நடவடிக்கையில் ஒன்றாக அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு இம்மாவட்டத்திலேயே கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றது. திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் 1994ம், 1995ம், 1996ம்ஆண்டுகளில் இக்கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

**இப்போது போடும் விதைக்கு ஏற்ப இன்னும் சில ஆண்டுகளில் பழம் பழுப்பதைப்போல, இன்றைய உங்கள் எண்ணத்திற்கு ஏற்பவே நாளைய பலனும் அமையும்.**

இக்கருத்தரங்குகளில் அறநெறிப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அப்பியாசப்புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் என்பனவற்றை திணைக்களம் அன்பளிப்பாக வழங்கியது. மேலும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களினது தேவையை முன்னிட்டு உசாத்துணை நூல்களை வழங்கியும், பண்ணிசை வகுப்புக்களை முன்னேற்றும் நோக்குடன் சுருதிப் பெட்டி,தாளம், தபேலா, என்பவற்றை வழங்கியும் ஊக்கமளிக்கப்படுகின்றது.

இந்த அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சியில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் பங்களிப்பு முக்கியமானது. இச்சங்கத்தினர் வவுனியா மாவட்டத்தின் அறநெறி வளர்ச்சில் தமது முழுக்கவனத்தையும் செலுத்தி தம்மாலான சரீர, பொருள் வசதிகளைச் செய்து வருகின்றார்கள். திரு. நா. சேனாதிராஜா அவர்களைத் தலைவராகக் கொண்ட சங்கத்தினர் சேவையில் தாமாகவே ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து வருவதுடன், பல உபகரணங்களையும் வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறார்கள். இன்னொரு சமய நிறுவனமான இந்துமாமன்றம் அறநெறிக் கல்விக்கு தன்னாலியன்ற உதவியைச் செய்து வருகின்றது.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பது எமக்குத் தெரிகிறதே யல்லாமல் இன்றைய சிறார்களை அறக்கல்வியில் வளர்த்தால் நாளைய தலைவர்களை நல்லவர்களாக நாம் காணலாம் என்பதை ஏனோ மறந்துவிடுகின்றோம். எனவே அறநெறிக்கல்வியின் அவசியத்தை மக்களிடையே பரப்புவோம். சமய நெறிகள் தான் மனிதனை மனிதனாக வாழ வழி வகுக்கின்றன. எனவே அறக்கல்வியில் மாணவ சமுதாயத்தை வழி நடத்துவோமாக.

********

## வெற்றியின் இரகசியம்

கோபத்தை அன்பினால் வெல்க !
தீமையை நன்மையினால் வெல்க !
கருமியைத் தானத்தினால் வெல்க !
பொய்யை மெய்யினால் வெல்க !

## சாந்தம்

வெற்றி வீரன் பகைமையை வளர்க்கிறான்.
தோல்வியுற்றவன் நோவுடன் கிடக்கிறான்.
வெற்றியும் தோல்வியும் விரும்பாத சாந்த முடையோன்
உவகையோடு வாழ்கிறான்.

## வவுனியாவில் திருமுறை விழா

கடந்த நான்கு வருடங்களாக வவுனியா இந்து மாமன்றத்தினர் பன்னிரு திருமுறைகளை முற்றோதல் செய்வதனைத் தமது செயற்பாடுகளில் ஒன்றாகச் செயல்படுத்தி வருகின்றனர்.

வருடாவருடம் தைத்திங்கள் 1ம் திகதி இந்நிகழ்ச்சி நடைபெறுவது வழக்கம். இவ் வருடம் 97-01-10ம் திகதி வெள்ளிக்கிழமை காலை திருமுறைச் சுவடிகளை குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக கோவில் குளம் சிவன் கோவிலுக்கு எடுத்துச் சென்று அங்கே மாலை 6.00 மணிக்கு முற்றோதல் செய்து ஞாபகார்த்த வெளியீடாக ஒளவையார் அருளிய வாக்குண்டாம் (மூதுரை), என்ற நூலையும் நான்காவது ஞாபகார்த்த வெளியீடாக வெளியிட்டு வைத்தனர். இந்நூலுக்கு தமிழ்மணி திரு. அகளங்கன் அவர்கள் விளக்கவுரை செய்துள்ளார். கடந்த வருடங்களில் பன்னிரு திருமுறை ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய நூல்களையும் ஞாபகார்த்த வெளியீடாக வெளியிட்டு வைத்தமை இங்கே குறிப்பிடத்தக்கது.

அன்றைய தினம் தமிழருவி த. சிவகுமாரன் அவர்களது தமிழ்மறை பற்றிய சொற்பொழிவு இடம்பெற்றது. அத்துடன் பன்னிரு திருமுறை முற்றோதல் காலங்களிற் பங்கேற்று பூர்த்தி செய்த அடியார்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

பன்னிரு திருமுறை ஊர்வலத்தின் போது வவுனியா கோவில்குளம் சித்திவிநாயகர் ஆலய திருமுறை வகுப்பு மாணவர்களும், வவுனியா சிந்தாமணி விநாயகர் அறநெறிப்பாடசாலை மாணவர்களும் திருமுறையை ஓதிச் சென்றார்கள்.

இந்து மாமன்றத்தினரின் இச் செயற்பாட்டில் வவுனியா சிவன் கோவில் அறங்காவலர் சபையினர் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி விழாவைச் சிறப்பித்தனர்.

தகவல் : கலாசார அலுவலர் வவுனியா

## இருபத்தோராம் நூற்றாண்டில் இந்துமத மறுமலர்ச்சி

திணைக்களம் நடத்தும் இந்து சமய பேருரைத்தொடரின் 83வது பேருரை நிகழ்ச்சி மார்ச் மாதம் 1ம் திகதி வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி. இராஜலட்சுமி கைலாசநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் புலவர் என். ரி. தெட்சணாமூர்த்தி "இருபத்தோராம் நூற்றாண்டில் இந்துசமய மறுமலர்ச்சி" எனும் பொருளில் உரை நிகழ்த்தினார்.

உதவிப்பணிப்பாளர் திரு. குமார்வடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

# பஞ்ச புராணம்

## தேவாரம்

தலம் :- திருப்பிரமபுரம் பண் :- நட்டபாடை

தோடுடைய செவி யன்விடையேறியோர் தூ வெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்பு மாவிளம்பே.

## திருப்பல்லாண்டு


பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க
பூத பரம்பரை பொலியப் புனித வாய் மலர்ந்தழுத
சீத வள வயற்புகலித் திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

- திருச்சிற்றம்பலம் -

# சூரிய நமஸ்காரமும், அதன் ப்லன்களும்




❋ சூரிய நமஸ்காரம், ஒரு தொகுதி அசைவுகளைக் கொண்டது. இது உடலின் அனைத்துப் பாகங்களுக்கும் பூரண பயிற்சியை வழங்குகின்றது. உள்ளுறுப்புக்களுக்கும், தசைகளுக்கும் நன்றாக இரத்தோட்டம் பாய்கிறது.

* இப்பயிற்சியை மேற்கொள்வதால் தோள், வயிறு, கை, கால், இடுப்பு பிரதேசத் தசைகள் வலிமை பெறுகின்றன.
* மன இறுக்கத்தைக் குறைக்கவும், மன அமைதிக்கும் இது உதவுகிறது.
* சுவாசப்பைகள் விரிந்து கொடுக்கின்றன.
* முதுகெலும்பு மூட்டுக்கள் பல திசைகளில் திருப்பப்படுவதால், முதுகு, இடுப்புப் பிரதேச வலி குறைகிறது.
* தொடர்ந்த முறையான பயிற்சி கூனல் நிலையையும் மாற்றி விடும்.
* வயிற்றுப்பகுதிக்கு நல்ல பயிற்சி கிடைப்பதால், கொழுப்பு (தொந்தி) கரைகிறது. பெருங்குடல் சிறுகுடல் என்பன புத்துணர்வு பெறுகின்றன.
* முறையான - தொடர்ந்த பயிற்சியின் மூலம் உடலின் வலி, துன்பம் என்பன குறைகின்றன.
* தொடர்ந்து இப்பயிற்சியினைச் செய்துவருவதால், மனம் ஒருமையடைகிறது. மன ஒருமைப்பாடு அளப்பரும் ஆற்றலை நல்கும்.
* சூரிய நமஸ்காரத்தினால் உடல், மன நலன்கள் பெறுக !

(படங்களில் பயிற்சி அசைவுகள் காட்டப்பட்டுள்ளன)

---

## சரணாகதி !

வாழ்க்கையில் நாம் நமது அறிவு, சாமர்த்தியம் இவற்றைப் பயன்படுத்தி பல வெற்றிகளை அடையலாம். ஆனால் இந்த வெற்றிகள் நமக்கு நிரந்தரமான மன அமைதியைக் கொடுப்பதில்லை. மேலும் மேலும் வெற்றிகளைத் தேடிச் செல்ல மனம் துடிக்கிறது. அவை கிடைக்காவிட்டால், உடைந்து போகிறது. ஆனால் நம்முடைய சக்தி, வல்லமை, திறமை எல்லாவற்றையும் பயன்படுத்தும் போது, அவற்றினால் கிடைக்கும் பலாபலன்கள் யாவும் ஆண்டவனையே சார்ந்தவை என்று எண்ணி அர்ப்பணித்து விடுவோமானால், நமது முயற்சியே நம்முடன் நிற்கிறது. அதன் விளைவுகள் நம்மைப் பாதிப்பதில்லை. இப்படிக் கடவுளிடம் நம்மை ஒப்படைப்பதுதான் சரணாகதித் தத்துவம்.

வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையிலும் இதைத்தான் நாம் செய்துகொண்டிருக்கிறோம். நமக்கு நிம்மதியான தூக்கம் வரவேண்டும் என்றால், நமது உடைமைகளைக் காக்கும் பொறுப்பைக் காவலாளியிடம் கொடுத்து விடுகிறோம். நாம் பத்திரமாக வீடு போய்ச் சேரவேண்டும் என்றால் அந்தப் பொறுப்பைக் காரை ஓட்டும் டிரைவரிடம் அளித்து விடுகிறோம். நாம் விரும்பும் உடையைத் தயாரிக்கத் தையற்காரரிடமும், நம்முடைய முடியைத் திருத்தி அழகிட நாவிதரிடமும் தலை வணங்குகிறோம். வாழ்க்கையின் சாதாரணத் தேவைக்காக, நாம் நம்மைப் பிறரிடம் ஒப்படைக்கும்போது வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட மிகப்பெரிய தேவைகளைப் பெற ஏன் நாம் ஆண்டவனிடம் நம்மை ஒப்படைக்கக் கூடாது?

- பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா -

*இன்சொல் பேசுவதால் நாக்கு காயம் படுவதில்லை !*

# சமய குரவர்களின் குரு பூசைத் தினங்கள்

**எஸ். தியாகராஜா**
**- கலாசார அலுவலர் -**

சைவமும் தமிழும் வளர்ந்து வந்த பாதையில், சைவ சமய குரவர்கள் எனப் போற்றப்படும் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்க வாசகர் ஆகிய நால்வரும் ஆற்றிய பணிகள் அளப்பரியவை. அன்பு நெறிமூலம் அற நெறியையும், அருள் நெறியையும், இனிக்கும் செந்தமிழால், இன்னிசையால் இறைவனைப்பாடிப் பரவியவர்கள். ஆலயங்கள் தோறும் அடியவர்களையும் அழைத்துக்கொண்டு சென்று முழுமுதலைப் பாடிப் பணிந்தேத்திப் பக்தி நெறி பரவச் செய்தவர்கள்.

சமயங் காட்டும் நால்வகை மார்க்கங்களான சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறி நின்று அதன் மூலம் சாரூப, சாலோக, சாமீப, சாயுச்சிய முத்திகளையும் அடைந்து நால்வகை மார்க்கங்களுக்கும் நால்வகை முத்திகளுக்கும் உதாரணமான நால்வர்கள்.

சைவ மதத்திற்கு நலிவு வந்து மக்களும், மன்னர்களும், மற்றைய மதங்களை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளை இறையருளால் அவர்களைத்தடுத்து நிறுத்தி, அற்புதங்களைப் புரிந்து சைவத்தின் பெருமையை நிலைபெறச் செய்த அருளாளர்கள்.

ஏனைய மதவாதிகளுடன் அனல் வாதம், புனல் வாதம், நோய் நீக்கல், ஊமையைப் பேசவைத்தல் போன்ற வாதங்களைப் புரிந்து சைவத்தின் சிறப்பினை உணர வைத்து மதம் மாறிச் சென்றவர்களை மீண்டும் சைவத்தை நோக்கித் திரும்பி வர வைத்த அற்புதம் நிறைந்தவர்கள். இறையருள் மிக்கவர்கள். அன்பும் கருணையும் மிகுந்தவர்கள்.

இச்சமய குரவர்கள் இறையருளினாற் புரிந்த அற்புதங்களைப் பற்றிச் சைவ சித்தாந்த சாத்திர நூல்களில் ஒன்றாகிய திருக்களிற்றுப்படியார் பின்வருமாறு கூறுகின்றது.

### சம்பந்தர்

"ஓடம் சிவிகை உலவாக் கிழியடைக்கப்
பாடல் பனை தாளம் பாலை நெய்தல் ஏடெதிர் வெப் (பு)
என்புக்குயிர் கொடுத்தல் ஈங்கிவை தாம் ஓங்கு புகழ்த்
தென் கலிவேந்தன் செயல்"

### அப்பர்

"கொல்கரியின் நீற்றறையின் நஞ்சிற் கொலை-தவிர்த்தல்
கல்லே மிதப்பாய்க் கடல் நீத்தல் - நல்ல
மருவார் மறைக்காட்டில் வாசல் திறப்பித்தல் திருவாமூராளி செயல்."

### சுந்தரர்

"மோகம் அறுத்திடின் நாம் முத்தி கொடுப்பதென
ஆகமங்கள் சொன்ன அவர் தம்மைத் தோகையர்பால்
தூ தாகப் போகவிடும் வன்தொண்டன் தொண்டுதனை
ஏதாகச் சொல்வேனியான். "

மேலும் மாணிக்க வாசகர் செய்தருளிய அற்புதங்களாக –

சிவபெருமான் நரியைப் பரியாக்கிக் கொண்டுவரும்படியும், மண் சுமந்து பாண்டியனால் பிரம்பு அடிபடும்படியும் பெற்றுக்கொண்டது.

பிற சமயத்தவரை வாதில் வென்று ஊமைகளாக்கிப் பின் பேச வைத்துச் சைவர்களாக்கியது.

பிறவியிலே ஊமையான பெண்ணை பேச வைத்து வாதிட வந்தோர் கேள்விக்கு விடை சொல்ல வைத்தது.

தாம் எழுதிய திருவாசகத்தையும், திருக்கோவையாரையும், சிவ பெருமானே எழுந்தருளிவந்து எழுதும்படி பெற்றுக் கொண்டது.

எல்லோரும் காணத் தில்லை நடராசரின் திருவடியில் சேர்ந்தது.

இவ்வாறு இறையருளால் அற்புதங்களைப் புரிந்த அடியார்கள் துயர் களைந்து சைவமும் தமிழும் நிலைக்க அரும்பணியாற்றிய அருளாளர்கள் சைவசமய குரவர்கள் நால்வரினதும் குரு பூசைத்தினங்களை ஆலயங்களும், இந்து மன்றங்களும், அறநெறிப்பாடசாலைகளும் சிறப்பாக அனுஷ்டிக்க ஆவன செய்ய வேண்டும். குரு பூசைத்தினத்தில் குறித்த குரவரின் திருவுருவச் சிலையை அவர்கள் வாய் மொழிந்த திருப்பதிகங்களைப் பக்தி சிரத்தையுடன் பாடிப் பரவி ஊர்வலமாக எடுத்துச் சென்று பக்தி எழுச்சியூட்ட வேண்டும். அவர்கள் குறித்த ஆன்மீகப் பேருரைகளை ஒழுங்கு செய்து நிகழ்த்த வேண்டும். இவற்றின் மூலம் ஆன்மீக சிந்தனையை மேம்பாடடையச் செய்யவேண்டும்.

**"சித்திரைச் சதயம் அப்பர் சிறந்த வைகாசி மூலம்**
**அத்தரைப் பணி சம்பந்தர் ஆனி மாமகத்திலந்த**
**முத்தமிழ் வாதவூரர் முதிய நல்லாடி தன்னில்**
**சுத்தமாம் சோதி நாளில் சுந்தரர் கைலை சேர்ந்தார்.**

**"பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர் கோன்**
**அடி போற்றி**
**ஆழிமிசைக் கல் மிதப்பில் அணைந்த பிரான்**
**அடி போற்றி**
**வாழி திருநாவலூர் வன்றொண்டர்**
**பதம் போற்றி**
**ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள்**
**போற்றி."**

" குருவடி சரணம் "

ஆலயங்கள் பூஜை வழிபாட்டுக்குரியவை அகத்தூய்மை யையும், புறத்தூய்மையையும் போற்று பவை ! ஆனால் பல ஆலயங்களின் சுற்றுப்புறங்கள் அசுத்தமாகக்கிடப்பதை நீங்கள் அறிவீர்கள். (விதி விலக்குகள் உண்டு), தேங்காய் ஓடுகள், தும்பு, பயன் படுத்தப்பட்ட மாவிலை, தோரணம், ஆங்காங்கு கொட்டிக் கிடக்கும் விபூதி,

## நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?

குங்குமம், சிதறிக்கிடக்கும் பூக்கள், பொங்கல், கடலை போன்ற பிரசாதம் போன்றவற்றால் ஆலயச் சூழல் அசுத்தமாகக் கிடக்கும். இது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? இந்நிலையை மாற்ற நீங்கள் கூறும் வழிகள் எவை என்பதை பத்துவரிகளுக்கு மேற்படாதவாறு எழுதி அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் அடுத்த கோபுரம் இதழில் பிரசுரமாகும்.

# அன்பே சிவம்

சைவ சமயம் மிகவும் தொன்மையானது. இதனைச் சிந்து வெளிச்சான்றுகளில் இருந்து நாம் அறியக்கூடியதாக உள்ளது. சைவத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான். சிவன் அன்பே உருவானவர்; அன்புக்கு கட்டுப்படாதவர் எவருமில்லை அவ்வாறே சிவத்துக்குக் கட்டுப்படாதவர்கள் எவருமில்லை.

அன்பிற்குத்தான் எவரும் அடிமைப் படுவர். அன்பினால் தான் சாந்தி, சமாதானம், ஒற்றுமை, சினேகத்துவம் என்பவற்றை ஏற்படுத்த முடியும். "மரியாதையைக் கொடுத்து மரியாதையை வாங்கு" என்று எமக்கு கூறுவதைப் போல அன்பைக் கொடுத்துத் தான் அன்பைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சைவசமய வரலாற்றிலே காலத்துக்குக் காலம் தோன்றிய அடியார்களும், சான்றோர்களும், அருளாசிரியர்களும் அன்பினாலேயே சைவசமயத்தைக் கட்டிக்காத்து நின்றனர். அன்னவர்களால் அருளப்பட்ட ஞானப் பொதிகள் அன்பையே எமக்கு ஊட்டின. இன்னும் அவை மக்களிடையே நிலைத்து நின்று அருள்பாலிக்கின்றன. அருளாசிரியர்களை மக்கள் வாழ்த்தி வழிபடக்கூடிய அகத்தூய்மையை அருட்பாடல்கள் ஏற்படுத்தியிருக்கின்றன.

ஆண்டவனின் அன்புக்கு அடிமைப்பட்ட அடியார்கள் அன்பு தான் சிவம் - சிவம் தான் அன்பு என்பதை எண்ணிப் பெருமைப்பட்டனர்.
திருமூலர் தனது திருமந்திரப்பாடலிலே இவ்வாறு குறிப்பிடுகிறார்.

**"அன்பும் சிவமும் இரண்டென்பர்
அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும்
அறிகிலார்
அன்பே சிவமாவதாரும்
அறிந்தபின்
அன்பே சிவமாய்
அமர்ந்திருந்தாரே"**

என்று அழகு தமிழில், எளிய நடையில் எடுத்துக்கூறுகின்றார்.

**" முள்ளை முள்ளால் எடுப்பது போல
அன்பை அன்பால் தான் பெறமுடியும்"**

திருவள்ளுவரின் அன்புடைமை அதிகாரத்தில் உள்ள ஒரு குறளை எடுத்துக் கொண்டால்,

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
அன்புடையார் என்பும் உரியர்
பிறர்க்கு "**

சி. மகேந்திரராஜா
(கலாசார உத்தியோகத்தர்)

என்பதில் அன்பில்லாதவர்கள் தமக்கென்றே எதையும் செய்வார்கள் ஆனால் அன்புள்ளவர்கள் தங்களது எலும்பு கூடப் பிறர்க்குப் பயன் பட வேண்டும் என்று அவாப் படுவார்களாம்.

அன்புள்ளவர்களே சைவ சமயிகள். ஆண்டவன் அன்புள்ளவன் அவனைப் பணியும் மக்களும் அன்புள்ளவர்களாவார்.

உண்மை அன்பை உணர்ந்தவர்கள் பாவம் செய்யத் தயங்குவார்கள். எல்லா ஜீவ ராசிகளிடமும் அன்பு செலுத்துபவர்களாக இருப்பார்கள்.

வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பது போல அன்பை விதைத்தவன அன்பை அறுப்பான். எனவே ஆழமான அன்பின் நிமித்தம் தான் நாம் எதிர் நோக்கும்

துன்பங்களிலிருந்து விடுதலை பெறமுடியும்.

சேக்கிழார் பாடிய பெரிய புராணத்தில் கண்ணப்பநாயனார் வரலாறு உதாரணமாக உள்ளது. கண்ணப்பர் மாமிசத்தைப் படைத்து இறைவனுக்குப் பூஜை செய்தார். சிவகோசரியார் கிரியை முறைப்படி அமுது படைத்துப் பூஜை செய்தார் ஆனால் இறைவன் மாமிசத்தையோ, அமுதையோ எதிர்பார்க்க வில்லை தன்மீது பக்தர்கள் வைத்திருக்கும் ஆழமான அன்பையே விரும்புகிறார். தனது இரண்டு கண்களையும் ஆண்டவனுக்கு அர்ப்பணிக்கத் துணிந்த கண்ணப்பனாரின் ஆழமான அன்பு இறைவனின் அருளைப் பெற்றுக்கொடுத்தது.

எனவே இறைவன் அன்பு ஊற்று இன்பப் பொருள் அன்பு தான் சிவம். சிவம் தான் அன்பு - அன்பே சிவம் அதுவே எம்மை ஈடேற்றும்.

***************

## இலக்கியச் சொற்பொழிவு



இலக்கியச் சொற்பொழிவு நிகழ்ச்சியில் பேராசிரியர் ஔவை நடராஜன் அவர்கள் உரை நிகழ்த்துவதையும், மொழித்திணைக்கள ஆணையாளர் திரு. நிமால் சமரசுந்தர, திருமதி. நடராஜன், திணைக்கள பதில் பணிப்பாளர் திருமதி. கைலாசநாதன் ஆகியோருடன் கூட்டத்தினரையும் படத்திற் காணலாம்.

*மலர்களும் கனிகளும் இயற்கையின் வடிவங்களின் தியாக உணர்வைக் காட்டும் அற்புதப் படைப்புகள். அதனாலேயே அவை ஆண்டவனுக்கு நிவேதிக்கப்படுகின்றன.*

# அறநெறிப் பாடசாலை அவசியத் தேவை

"சோஷலிஸ, அரசியல் கருத்துக்களைப் பரப்புமுன் ஆன்மீகக் கருத்துக்களின் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடச்செய்யுங்கள். நம் உபநிடதங்களிலும் மத நூல்களிலும், புராணங்களிலும், பொதிந்து கிடக்கிற அற்புதமான கருத்துக்களை வெளிக்கொணர்ந்து நாடு முழுவதும் வாரி இறைக்க வேண்டும்" என்கிறார் வீரத்துறவி விவேகானந்தர்.

ஆம். இவ்வாறு ஆன்மீகம் போதிக்கப்பட்டால், அதனை உணர்ந்து மக்கள் அதன்படி வாழத் தலைப்பட்டால் நாட்டில் கள்ளம், கபடு, சூது, வாது, மறையும். அமைதி, அன்பு சேவை நிறையும்.

இத்தகைய நிலை நாட்டில் ஏற்படும் பொழுது, நாட்டுமக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்வர். போட்டி பொறாமை அடக்கியாளும் முயற்சி, லஞ்சம், ஊழல் என அனைத்துத் தீக்குணங்களும் மக்கள் மனதை விட்டு அகலும், ஒருவருக் கொருவர் உதவி புரிந்து இன்பமாய் வாழ்க்கை நடத்தும் நிலைமை ஏற்படும்.

எனவே ஆன்மீகக் கருத்துக்களை நாம் பரவச் செய்யவேண்டும்.

தமிழ் நாடு, கன்யாகுமரி மாவட்டம்
வெள்ளிமலை,
ஸ்ரீ விவேகானந்த ஆஸ்ரமம் ஹிந்து தர்ம வித்யா பீடத்தைச் சேர்ந்த
**ஸ்ரீமத் சுவாமி சைதன்யானந்தா அவர்கள்**
வழங்கிய செய்தி

மாணவச் செல்வங்கள் பொதுவாக, உருவாக்குவது போல் உருவாவார்கள். எனவே சிறந்து விளங்கும் மாணவச் செல்வங்களை உருவாக்க அவர்களுக்கு அறநெறிப் பாடசாலைகள் நடத்தி ஆன்மீகமும், ஒழுக்க நெறிகளும் போதிக்கப்படவேண்டும். இது ஒரு மிகச்சிறந்த புனிதப் பணியாகும். இதனைச் செய்வதில் நாம் மிகவும் ஆர்வமும், ஊக்கமும் உடையவர்களாக மாற வேண்டும். இதற்காக நாம் சில தியாகங்களைச் செய்ய வேண்டிவரும். பொருட் செலவு வரும். உடல் உழைப்பு நல்க வேண்டிவரும். ஆனால் இது போன்ற தியாகங்கள், நமக்கு இறையருளைப் பெற்றுத் தருவதுடன், முத்தி நிலைக்கும் வழிவகுக்கும். "தியாகத்தாலன்றி அமரத்துவம் அடையப்பட மாட்டாது." என்பது வேதவாக்கு.

எனவே தியாகமும், சேவையுமே கொள்கையாகக்கொண்டு ஆன்மீகப்பணி செய்து இறையருள் பெறுவோமாக. இதற்கு எம்பெருமான் அருள் செய்யப் பிரார்த்திக்கிறோம்.

- சுவாமி சைதன்யானந்தா -

**அ**ழகான வீடு கட்டுகின்றீர்கள். அதில் வெளிச்சத்துக்கு மின்சார விளக்குகளை பொருத்துகிறீர்கள். குளிக்க வெந்நீர் வேண்டுமே? அதற்காக ஒரு மின்சார ஹீட்டரும் வைத்திருக்கிறீர்கள். பொழுது போக வேண்டாமா? ரேடியோவும் வந்து சேருகிறது. ஒரே மின்சாரம் தான். ஓர் இடத்தில் வெளிச்சம்; இன்னொன்றில் சூடு; வேறொன்றில் நயமான ஒலி. நமக்குள்ளே இருக்கும் ஆன்மீக மையம் தான் உடலாக இயங்குகிறது; மனத்தின் வழியாகச் சிந்திக்கிறது; புத்தியாக இருந்து அறிவைக் கொடுக்கிறது; மின்சாரம் மூன்று பொறிகளில் வெவ்வேறு விதமாக இயங்குவதைப் போல. ஸ்விட்சை அணையுங்கள் மின்சாரம் நின்று போகட்டும். வெளிச்சம் கிடைப்பதில்லை; வெந்நீர் இல்லை; பாட்டும் கேட்க முடியாது. ஆன்மீக மையமான உயிர்ப் பொறி அணையட்டும். உடல், பறித்த காய்கறிகளைப் போல் வாடத் தொடங்குகிறது. செயல்கள் அனைத்தும் அடங்கி விடுகின்றன.

ஸ்விட்சுகள் அணைந்து விட்டால் அந்தக் கருவிகள் செயல் படுவதில்லை. ஆனால் மின்சாரம் இல்லை என்று சொல்லிவிட முடியுமா? விரலை வைத்துப் பாருங்கள் இருக்கிறதா இல்லையா என்று கம்பி சொல்லும்! உடல் செயலற்றுப் போய் விடலாம். ஆனால் ஆன்மா அழிவதில்லை. அது நிரந்தரமானது. அது தொடர்ந்து கொண்டே இருக்கிறது . . .

- சுவாமி சின்மயானந்தா -

# அன்னை சாரதா தேவியார்

அன்னை சாரதா தேவியார் உலகப் புகழ் பெற்ற பெண் மணிகளைப் போல படித்து பட்டம் பெற்றவர் அல்ல. உயர் பதவிகளை வகித்துப் புகழ் பெற்றவர் அல்ல.

கல்கத்தாவிலே ஒரு குக்கிராமத்திலே பிறந்த, ஒன்றும் அறியாத ஒரு பட்டிக்காட்டுப் பெண். இந்தப் பட்டிக்காட்டுப் பெண் சிறுமியாக இருந்த போது, இறைவனின் அவதாரமான ஸ்ரீராமகிருஷ்ணர் அவதாரத்தை தேடிப்பெற்றார். அவர்களுக்குப் பால்யவிவாகம் நடைபெற்றது. பாமரக் கண்களுக்கு அது திருமணம். ஆனால் உண்மையில் அது சிவனும் சக்தியும் இணைந்த ஒரு நிகழ்வு. காலக்கிரமத்தில் அந்த உண்மை வெளிமிடப்பட்டது.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரே அன்னை சாரதாவை சுவாமி பீடத்தில் ஏற்றி வைத்துப் பூஜை செய்திருக்கிறார்.

சுவாமி விவேகானந்தர் அன்னையை பராசக்தியாகவே பாவனை செய்தார் என்பதும் தெளிவாகிறது. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் மறைவுக்குப் பின் அன்னை சாரதாவின் ஆத்மீக சக்தியே அவரது சீடர்களையும் பக்தர்களையும் வழிநடத்தி வந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

## அன்னை அளித்த செய்தி

சாரதா தேவியார் உலகத்துக்கு விட்டுச் சென்ற செய்தி பகவான் இராமகிருஷ்ணரின் வாயிலிருந்து வெளியாகின்றது. அதைப் படிக்கும் போது இறைவன் காரைக்கால் அம்மையாரைப் பார்த்து "அம்மையே" என்று அழைத்தமை நினைவுக்கு வருகிறது. ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியது இது தான்.

"இறைவனின் தாய்மை என்னும் அன்புத் தத்துவத்தை உலகிற்கு போதிக்க அவதரித்தவர் அன்னை " - இவ்வாறு தான் ஸ்ரீராமகிருஷ்ணர் அன்னை சாரதாவின் பிறவி நோக்கம், பற்றிக் கூறுகிறார். அதை சாரதா தேவியார் எவ்வாறு நிறைவேற்றினார் என்பதை அவரது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் பார்க்கிறோம்.

இறைவன் தாயுமானவனாகப் போற்றப்படுபவன். அந்த வகையிலும் அன்னை சாரதா தேவியின் "தாய்மை" முக்கியத்துவம் பெறுகிறது. அன்னை தன்னைப்பற்றிக் கூறும் போது "கடவுளின் தாய்மை எப்படிப்பட்டது என்பதை செயல் முறையில் காட்டுவதாகவே ஸ்ரீராமகிருஷ்ணர் தன்னை உலகில் விட்டுச்சென்றிருக்கின்றார்" என்று பல முறை கூறியிருக்கிறார்.

க. தங்கேஸ்வரி
(கலாசார அலுவலர்)

அன்னையார் தனது ஆசிரம வாழ்க்கையின் போது இதை ஒவ்வொரு கட்டத்திலும் நிருபணம் செய்தார். தீட்சை பெறுவதற்காக ஆஸ்ரமத்திற்கு வரும் பக்தர்களில் தீயவர்களை, பிரமானந்தர் அன்னையிடம் அனுப்பி விடுவார். அன்னையாரோ அவர்களிடம் எவ்வித வேறுபாடும் காட்டாது அனைவருக்கும் தீட்சை கொடுத்ததுடன் அதன் விளைவாகத் தன் உடல்மேல் குவிந்த கர்மங்களையும் முகமலர்ச்சியோடு ஏற்றுக்கொண்டார்.

அவ்வாறே பாவிகள் தமது பாதங்களைத் தொடுவதன் மூலம் தன்னிடம் சேரும் பாவச்சுமைகளையும், முகம் சுளிக்காமல் ஏற்றுக்கொண்டார்.

## ஆத்மீக வளர்ச்சி

கல்கத்தாவில் அன்னையாருக்கு யோகின்மா என்னும் சிஷ்யை துணையாக இருந்தார். அவர் எப்போதும் அன்னையின் கூடவே இருந்தார். இக்காலத்தில் அன்னையார் ஸ்ரீராமகிருஷ்ணரைப் போலவே அடிக்கடி சமாதியில் மூழ்கிப்போனார். தான் வேறு இராமகிருஷ்ணர் வேறு இல்லை. இருவரும் ஒருவரே என்பதை அவர் உணர்ந்தார். அதை மற்றவர்களுக்கும் வெளிப்படுத்தினார். சுருங்கச் சொன்னால் ஸ்ரீராமகிருஷ்ணர் விட்ட இடத்திலிருந்து அவரது பணிகளை அன்னையார் தொடர்ந்தார்.

கல்கத்தா ஆசிரமத்தில் தான் இருந்த இடத்தில் இருந்து கொண்டே முன்பு ஸ்ரீராமகிருஷ்ணர் எவ்வாறு ஆன்மீக ஒளியைப்பரப்பி, தனது ஆத்மீக சக்தியால் பல காரியங்களை நிறைவேற்றினாரோ, அவ்வாறே பல காரியங்களைச் செய்தார். ஆசிரமத்தைத் திறம்பட நிர்வகித்தார். வெளிநாட்டிலிருந்து வந்த பலருக்கு ஆத்மீக வழி காட்டினார். உலகின் பல பாகங்களிலும் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆன்மீக உபதேசத்திற்கும் தீட்சைக்கும் கூட்டமாக வந்த போது அவர்களுக்கு ஆன்மீக விளக்காக அன்னை விளங்கினார்.

## அன்னையின் இறுதிக்காலம்

இவ்வாறு 32 வருடங்கள் (1897 - 1920) ஸ்ரீராமகிருஷ்ணரின் பணியைத் தொடர்ந்த அன்னையார், தமது இறுதிக்காலத்தில் அவரைப் போலவே பக்தர்களுக்கு தீட்சை வழங்கியதன் மூலம் கிடைத்த பாவச் சுமையைக் கரைப்பதில் சில நாட்கள் துன்புற்றார்.

இந்த இறுதி நாட்களில் அன்னையார் பெரும்பாலும் சமாதி நிலையிலே இருந்தார். யாராவது அவரை அணுகினால் எரிச்சலுற்றார். பல டாக்டர்கள் வந்து பார்த்தனர். யோகின்மா என்ற சிஷ்யையும், சாரதானந்தர் என்ற சீடரும் அவரது தேவைகளைக் கவனித்துக் கொண்டனர்.

கடைசி மூன்று நாட்கள் அவர் சுயநினைவு இழந்த நிலையில் இருந்தார். ஒரு முறை சுவாமி சாரதானந்தரை அழைத்து "சரத் ! நான் போகிறேன். யோகின்மா, கோலாப்மா மற்றும் எல்லோரும் இருக்கிறார்கள். அவர்களை கவனித்துக்கொள்" என்றார். கண்ணை மூடினார்.

1920 ஜுலை 20ம் திகதி பகல் அவர் உயிர்பிரிந்தது. அன்னை மகாசமாதி அடைந்தார்.

இன்று அன்னையின் ஒளிமயமான வாழ்க்கையையும், பணிகளையும், உபதேசங்களையும் நினைவு கூரும் வண்ணம், மூன்று நினைவாலயங்கள் உள்ளன. அவை பேலூர் மடம், உத்பாதன் மாளிகை, ஜெயராம்பாடி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.
அவருடைய தாய்மையைக் குறித்து சுவாமி அபேதானந்தர் இயற்றிய பாடல்களில் ஒன்று பின்வருமாறு அமைந்துள்ளது.

*இரு விழிப்பார்வையில் யோகம் இலங்க*
*எழில் முகம் தன்னில் கருணை விளங்க*
*வருந்தும் உயிர்பால் மனம் மிக உருக*
*வளரொளி பொழியும் தாய்மையின்*
*விளக்காய் பெருங்கொடை வழங்கும்,*
*திருவுடைவடிவாய் பேருல குயிர் நலம்*
*கருதிவந்துற்றுப் பரமஹம்சரின் நினைவிலே*
*இன்பம் பருகிய தாயை வணங்கிடுவோமே*

அன்னையின் புகழ் என்றும்
நிலைப்பதாக !

# சின்னச் சின்னச் செய்திகள்

✤ ஈசுவரப் புத்தாண்டின் பஞ்சாங்கத்தைத் திணைக்களம் வெளியிட்டுள்ளது. இதனை திணைக்கள உதவிப்பணிப்பாளர் (ஆராய்ச்சி) திரு. எஸ். தெய்வநாயகம் அவர்கள் தொகுத்துள்ளார்.

✤ திணைக்களத்தின் பருவ இதழான "பண்பாடு" அச்சில் உள்ளது. இவ்விதழில் "தமிழ் ஆராய்ச்சி - வரைவிலக்கணமும், ஆய்வுப் பரப்பும் (பேராசிரியர். அ. பாண்டுரங்கன்) இலங்கைத் தமிழ்ச் சிறுகதைகள் (திருமதி. அ. முருகதாஸ்), சைவத்தின் தோற்றமும், வளர்ச்சியும் ஒரு நோக்கு (பேராசிரியர். வி. சிவசாமி), தமிழர் பூப்புநீராட்டு நடைமுறைகள் (திருமதி. மனோன்மணி சண்முகதாஸ்), ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் பித்தன் கதைகள் (செ. யோகராசா) ஆகிய கட்டுரைகள் இடம்பெறுகின்றன.

✤ திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள தமிழ் நாடகமன்றங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்று ஏப்ரல் மாதம் இறுதி வாரத்தில் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை கலாசார உத்தியோகத்தர் திரு. மாத்தளை. பி. வடிவேலன் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்.

✤ அம்பாறை மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு மே மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளதென அம்பாறை மாவட்டக் கலாசார அலுவலர் திரு. எஸ். தியாகராஜா தெரிவித்துள்ளார்.

✤ இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதியில், மண்டபம், அறைகள் என்பவற்றை ஒதுக்கீடு செய்வதற்கு திணைக்களத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பாக உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். குமார் வடிவேல் அவர்களுடன் தொடர்புகொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

✤ திணைக்களம் கொழும்பில் நடாத்திவரும் இந்துசமயப் பேருரை, இலக்கியபேருரை என்பன போன்று ஏனைய மாவட்டங்களின் நகரங்களிலும் பேருரைகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

✤ மே மாதம் மூன்றாம் வாரத்தில் ஐந்து தினங்கள் சைவசித்தாந்தப் பேருரைகள் கொழும்பில் நடைபெறவுள்ளன. திணைக்களம் ஒழுங்கு செய்து நடத்தும் இத்தொடரில், இலக்கண வித்தகர். இ. நமசிவாய தேசிகர் அவர்கள் கலந்துகொண்டு சொற்பொழிவுகளை நடத்தவுள்ளார்.

✤ ✤ ✤ ✤ ✤

## அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு - திருகோணமலை.

திணைக்களம் ஒழுங்கு செய்து நடாத்திய திருகோணமலை மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒருநாட் பயிற்சிக் கருத்தரங்கு ஏப்ரல் மாதம் 6ம் திகதி ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. திருமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. என். புவனேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திரு. எஸ். மகேந்திர ராஜா வரவேற்புரை நிகழ்த்தினார்.

திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. வி. விக்கிரமராஜா, திரு. எஸ். குமார்வடிவேல், திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை பொதுச் செயலாளர் திரு. எஸ். சிவபாதசுந்தரம் ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்தினர்.

"அறநெறிப் பாடத்திட்டத்தின் உள்ளடக்கமும் செயல்படுத்தும் முறையும்" எனும் தலைப்பில் உதவிப்பணிப்பாளர் திரு. அ. பரசுராமன் அவர்களும், "அற நெறிக் கல்வியில் சிறார்களை பயன்படுத்துதல்" எனும் பொருளில், வடகிழக்கு மாகாண கல்வி கலாசார உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். எதிர்மன்னசிங்கம் அவர்களும் "அறநெறிக் கல்வி மாணவர்களின் மேம்பாட்டுக்கு எவ்வாறு உதவுகிறது" எனும் பொருளில் ஆசிரிய ஆலோசகர் திருமதி. சித்தி பத்மநாதன் அவர்களும் "ஒழுக்கமுடைமையும் அன்புடைமையும்" எனும் பொருளில் ஞானசிரோன்மணி, பண்டிதர் இ. வடிவேல் அவர்களும் விரிவுரைகள் நிகழ்த்தினர்.

குழுநிகழ்ச்சி, கலந்துரையாடல் என்பனவும் இடம்பெற்றன. நிறைவாக, கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கு, வரவுப்பதிவேடு, ஆசிரியர் குறிப்பேடு, பாடத்திட்டம், உசாத் துணைநூல்கள் என்பன வழங்கப்பட்டன. திரு. சி. மகேந்திரராஜா அவர்களின் நன்றியுரையுடன் கருத்தரங்கு நிறைவுபெற்றது.

# திருநீறு, உருத்திராக்கம், திருவைந்தெழுத்தின் மகிமைகள்

- சைவப்புலவர் சி. விசாலாட்சி -

சைவ சமயத்தவர்களின் உயிர் நாடிகளாக உள்ளவை திருநீறு, உருத்திராக்க, மணிமாலை திருவைந்தெழுந்து என்பனவாகும். மனிதனுக்கு நாடி, நாளம் போன்ற நரம்புகள் எவ்வாறு முக்கியமோ அதைவிட சைவ சமய மக்கட்கு மேற்கூறிய சிவ சின்னங்கள் மிக மிக முக்கியமாகும்.

## திருநீறு

பொய்ச் சமயமாகிய சமணசமயத்தை அனுட்டித்து வந்த கூன் பாண்டியன், சமண முனிவர்களினது துர்ப்போதனையால், திருஞான சம்பந்தர் சுவாமிகளும் சிவனடியார்களும் மதுரையில் தங்கியிருந்த சத்திரத்திற்குத் தீ மூட்டுவித்தான். இதனை யறிந்த திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், சமணர்களை தீ மூட்டியதற்குப் பாண்டியன் உடன்பாடாகவே இருந்தமையால்,

**"செய்யனே திரு ஆலவாய் மேவிய ஐயனே**
**அஞ்ச வென்றருள் செய்யெனைப் பொய்ய**
**ராம்அமணர் கொளுவுஞ்சுடர் பையவே**
**சென்று பாண்டியற் காகவே"**

என திருஞான சம்பந்தர் பாடினார். இதனால் பாண்டியனுக்கு வெப்பு நோய் உண்டானது. பாண்டியன் வெப்பு நோயினால் மிக மிக வருந்தினான். பாண்டியனின் ஆற்றொணாத் துயரைக் கண்ட சமணர் எத்தனையோ முறையில் மந்திரம் ஓதி நீர் தெளித்தனர். மயிற்பீலியாற் தடவினர் நோய் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அங்கு எழுந்தருளினார்,

**"மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்திரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு**
**தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு**
**செந்துவர் வாயுமை பங்கன்திருவால வாயான்**
**திருநீறே"**

என்னும் பதிகத்தைப் பாடினார். இதனால் பாண்டியனின் வெப்பு நோய் முற்றாகவே தணிந்தது என்று பெரிய புராணம் கூறுகின்றது.

ஆன்மாக்கள் மும்மல நோயினின்றும் நீங்குவதற்காகத் திரு நீறு அணிதல் வேண்டும். இனி நெற்றியில் விபூதி அணிதல் யமுனையில் நீராடிய பலனுள்ளதெனச் சிவ மகா புராணம் கூறுகிறது.

## திருவைந்தெழுத்து

திருவைந்தெழுத்தைச் ஸ்ரீ பஞ்சாட்சரம் என்றும் கூறுவர், ஸ்ரீ பஞ்சாட்சரம், தூல பஞ்சாட்சரம் சூக்கும பஞ்சாட்சரம், என்று இரு வகையாக அழைக்கப்படும். இவ்விரண்டினுள் சூக்கும பஞ்சாட்சரமாகிய சிவாயநம என்னும் மந்திரமே தலையாயது.

" சி " காரம் சிவத்தையும், "வா" காரம் சத்தியையும், "ய" காரம் ஆன்மாவையும், "ந" காரம் திரோதான சக்தியையும், "ம" காரம் மலத்தையும் குறிக்கின்றது. "ய" காரம் என்னும் ஆன்மா நடுவில் இருக்கின்றது. இது திரோதான சக்தியுடனும் மலத்துடனும் சேராது, சிவத்துடனும், சக்தியுடனும் சேர்தலே விவேகமாகும்.

சைவ சமயத் தெளிவில்லாத அப்பரடிகள் சமண சமயம் சேர்ந்து சமண சமயப்பணியில் ஈடுபட்டார். சமண சமயப் படுகுழியில் அகப்பட்ட தனது தம்பி மீளா நரகம் அடையப் போகின்றானே என திலகவதியார் வருந்தின காரணத்தால் அப்பரடிகள் சூல நோயினால் பீடிக்கப்பட்டு மீண்டும் சைவசமயம் சேர்ந்தார்.

இதனை யறிந்த பல்லவ மன்னன் அப்பரடிகட்குப் பல கொடுமைகளைச் செய்தான். அப்பர் அவற்றினால் எதுவித இடருமின்றிக் காணப்பட்டார். கடைசியாகப் பல்லவன் கட்டளைப்படி சமணர்கள், அப்பரடிகளைக் கருங்கல்லில் கட்டிக் கடலில் தள்ளினர். அப்போது அப்பரடிகள், உலகின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானின் செம்பொற்பாதக் கமலங்களை தன் இருதய தாமரையில் வழுத்தி ஒன்றும் நினையாதவராய்,

**சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணை திருந்தடிப் பொருந்தக்**
**கைதொழ கற்றுணைப் பூட்டியோர் கடலுட்**
**பாய்ச்சினும் நற்றுணை யாவது**
**நமச்சிவாயவே"**

என்ற பதிகத்தைப் பாடினார். எம்பெருமானின் கருணையால் கருங்கல் தெப்பமாகியது, அப்பரடிகள் சுகமே பிழைத்துக்கொண்டார். சுந்தர மூர்த்தி நாயனார்,

"நற்றவா உன்னை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே என்றும், நமச்சிவாய வாழ்க நாதன் தான் வாழ்க என்று மணிவாசகப் பெருமானும் பாடியுள்ளனர்"

**"பெற்ற தாய்தனை மக மறந்தாலும்**
**பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும்**
**உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்**
**உயிரை மேவிய உடல் மறந்தாலும்**
**கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்**
**கண்கள் நின்றிமைப்பது மறந்தாலும்**
**நற்றவத்தவர் நின்றுள்ளோங்கும்**
**நமச்சிவாயத்தை நான் மறவேனே.**

என வடலூர் வள்ளலார் நெஞ்சம் நெக்குருக நமச்சிவாய மந்திரத்தின் அருமைப் பாட்டைக் கூறுகின்றார்.

அந்தளவுக்கு திருவைந்தெழுத்தின் மகிமை அளவற்றதாகும். திருநீறு பூசி, திருவைந்தெழுத்தோதி, உருத்திராக்க மணிமாலை அணிந்த ஒருவனை யார் எள்ளி நகையாடுகின்றார்களோ அவர்களுடைய வாழ்க்கை நாசமாகி விடுகின்றதெனவும் சிவமகா புராணம் கூறுகின்றது.

## உருத்திராக்க மணி மாலையின் மகிமை

உருத்திராக்க மணிமாலைகளை ஆகம விதிப்படி அணிய வேண்டிய இடங்களிலே அணிந்து, ஆசனத்தில் அமர்ந்து தியானம் செய்தால் முத்தி கிட்டும் என்பதில் சந்தேகமில்லை. அவனைக் கண்டவர்க்கும் சகல பாவமும் நீங்கும். கங்கா ஸ்நான பலனும் கிடைக்கிறது. சிவதரிசனம் கண்ட பலனையும் பெறுவான். ருத்திர மாலையை உருட்டி நூற்றெட்டுத்தரம் சிவ மந்திரம் ஜெபித்தவன் ஆயிரம் சிவ மந்திரம் ஜெபித்த பலனை அடைவான். இவ்வாறு சூரியன், கணபதி, சக்தி போன்ற மந்திரங்களையும் ஜெபித்தல் மிகவும் சிறந்த பலனைத் தருகின்றது.

முத்தி, புத்திர பாக்கியம், ஐஸ்வரியம், வித்தை, புகழ் முதலியவற்றையும் விரும்புபவர்கள் ருத்திராக்க மணிமாலை தரித்துத் தினமும் சிவமந்திரம் ஜெபித்து வந்தால், அவற்றைத் தடையின்றி அடைவார்கள்.

சிவபக்தன் ருத்திராக்க மணி மாலையைச் சிறப்பாக அணிய வேண்டும். ருத்திராக்க மணி மாலை விரும்பி அணிந்தாலும், விரும்பாமல் அணிந்தாலும் பயனுடையதாகும் என்பது துணிபாகும்.

சிவபெருமானையும் விஷ்ணுவையும் தியானித்துச் ஜெபம் செய்ய உருத்திராக்க மணிமாலையே சிறந்ததாகும், சுகத்தையும் தருவதாகும். எவ்வாறு கூறினாலும், சிவனுக்கு உகந்தது உருத்திராக்க மணிமாலையாகும். பூர்வீகத்தில் வியாச பகவான் போன்ற முனிவர்கள் சாஸ்த்திர விசாரணைகள் செய்து உருத்திராக்க மணி மாலையே சிறந்ததென முடிவாகக் கூறியுள்ளனர்.

✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣

உணவை ஒருவனுக்காக மற்றவன்
உட்கொள்ளுவதில் பயனில்லை.
ஆத்ம சாதனமும்
அதைப்போன்றதே. வழிபாட்டுக்கும்
சுயமுயற்சி மிக மிக அவசியமானது.

# சைவ ஆலயங்கள் மக்களின் சமூக நிலையங்களே !

**- ஆழ்கடலான் -**

சிவத்தோடு சம்பந்தமுடையது சைவம். சிவனையே முழுமுதற் பொருளாக வழிபடுபவர்கள் சைவசமயிகள். இந்து தர்மம் பேசும் ஆறு சமயங்களுட் சைவமும் ஒன்று. இவர்கள் புறத்தொழாதவரராய் வாழ்பவர். இன்றைய சமுதாயம் இதைக்கொஞ்சம் மனதிலே ஆழப்பதித்தல் முக்கியம். யார் சிவனோடு சம்பந்தமில்லாதவர்களாக வாழ்கிறார்களோ அவர்களே தீண்டத்தகாதவர்கள்.

இதையே அருளாளர்கள் "சிவம் வேண்டார் தமை நாம் தீண்டோம்" எனவும் "திருநீறிடார் மேனி நாம் தீண்டோம்" எனவும் சுட்டிக் காட்டினர். சைவப் பெருங்குடி மக்களின் இருதயமாக, உயிர் நாடியாக, உயிர்ப்பாக அமைந்தவை ஆலயங்களே.

சேவையென்ற இலக்கோடு அவை நிர்வகிக்கப்பட்டாற்தான் ஒவ்வொரு நபரும் ஆலயத்தால் முன்னேறுவான், உய்திகாண்பான்.

"கோயிற் பூனை தேவரை மதியாது" என்ற முதுமொழிக்கு இலக்கணமாய் இறைவனின் இருக்கைகள் அமையக்கூடாது. இறைவனுக்கு கேடிலியப்பன் என்றும் ஒரு திருநாமம் உண்டு. ஈச்சுவரத்தை கேடிலாத ஈச்வரன் என்று நாயன்மார்கள் பாடினர். எனவே கேடிலியை நாடுபவர் கேடிலாரே என்பது அப்பர் வாக்கு.

எவரும் அர்ச்சனை பண்ணும் வகையில் நல்லூரிற் பற்றுச்சீட்டு ஒரு ரூபா தான், வேண்டுமானால் கூடிய சீட்டுக்களை வசதி வாய்ப்புள்ளோர் பெற்று அர்ச்சனை

> **"ஈழத்துத்தமிழர்களின் பண்பாட்டிலே சமயஞ்சார்ந்த உணர்வுகளும்,நம்பிக்கைகளும் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றன. இவற்றின் நிலைக்களனாகத் திகழ்பவை ஆலயங்கள்."**
>
> பேராசிரியர். சு. வித்தியானந்தன்

நித்திய நைமித்திய ஆராதனைகள், உற்சவங்கள், ஆண்டு விழாக்கள், அபிஷேகங்கள், ஹோமங்கள், இலட்சார்ச்சனைகள் எவ்வளவு முக்கியமோ, அவற்றை விட உயர்ந்த தேவகைங்கரியம் மக்களுக்கு, மனிதகுலத்துக்கு அருட் பணியாற்றல். இதனையே அப்பர் அடிகள் "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனப் பாடினார். கிடப்பதே என்ற நிலை தன்னிழப்பைக் குறிப்பதாகும். இன்றைய ஆலயமுகாமையாளர்களும், அர்ச்சகர்களும் தன்முனைப்போடு தான் இயங்குகின்றார்கள். சிலர் அதற்குப் புறம்பானவர்களாக அமையவும் கூடும். வியாபாரக் கண்ணோட்டம் ஆலயங்களில் இல்லாமல், மக்கள் சேவையே மகேஸ்வரன்

பண்ணலாம். உசன் கந்தசாமி கோயிலில் உண்டியற் பெட்டியே இல்லை. ஆனால் ஆலயம் சிறப்பாக இயங்குகின்றது. இப்படியான ஆலயங்கள் முன்மாதிரியானவை.

மக்களை மையமாகக் கொண்டு இயங்கும் தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானம், மாத்தளை முத்துமாரியம்மன் கோயில் போன்ற இன்னும் சில விரல்விட்டு எண்ணக் கூடிய ஆலயங்களை அடியொற்றிப் நடப்பது சமுதாயத்தை மேம்படுத்தப் பெரிதும் உதவும். சமயத்தோடு இணைந்த சமுதாயப் பங்களிப்புகள் ஆலயங்கட்கு நிறைய உண்டு. கோயிலைப் பூட்டி வைக்கும் நிலை மாறி பகலிற் சேவார்த்திகள் பிரார்த்தனை செய்யும் சூழ்நிலையை ஆக்க வேண்டும்.

வேத பாடசாலைகள், சமய வகுப்புகள், திருமுறைப்பாராயண அறிமுகம், முதியோர் கல்வி, சிறார் பராமரிப்புப்பண்ணை, நடனம் சங்கீதம், ஒழுக்கம் சம்பந்தமான உபதேசங்கள் பாடசாலைகள், ஆதுலர் சாலைகள், உணவு விநியோகம், அறநெறி நிலையங்கள், நூல் நிலையங்கள், ஏழை - பேதைகட்கு உதவுதல், வைத்திய வசதிகள் போன்ற சமுதாயப் பணிகள் ஆலயங்களிலே நடைமுறைக்கு கொண்டு வர வேண்டியனவாகும்.

மிகவும் அவசியமான இடங்களில் ஆலயங் கட்டல், சிதிலமான கோயில்களைக் கட்டி எழுப்புதல், வசதி குறைந்த ஆலயங்களைப் பராமரித்தல், சமய ஆசிரியர்களை உருவாக்குதல், விதவைகள் நலம், முதியோர் நலம் பேணல் போன்றன இன்று மிக முக்கியமாகப் பேணப்பட வேண்டியனவாகும். பூட்டிக்கிடக்கும் ஆலயங்கள் திறக்கப்பட்டுப் பூஜைகள் நடைபெற வேண்டிய செயற்பாடுகள் தொழிற்படவும் வேண்டும். கல்யாணமண்டபங்களில் பணவசதி படைத்தவர்களே கல்யாணத்தை செய்யக்கூடியதாகப் பெருந்தொகைப் பணம் வர்த்தகரீதியாக அறவிடப்படும் அதே வேளை சாதாரண மக்களின் கல்யாண வைபவம் நடக்கும் வண்ணம் ஆவன செய்யப்படவும் வேண்டும். எனவே ஆலயம் ஒரு வணக்க இடம் மட்டுமல்ல, சமூக வாழ்வின் மத்திய நிலையமாகவும் இயங்க வேண்டும் என்பதை சைவப் பெருங்குடிமக்கள் உளத்திற் கொள்வார்களாக.

✣✣✣✣✣✣✣

## இசைநடனக் களஞ்சியம் - நூல் வெளியீட்டுவிழா



இசைநடனக்களஞ்சியம் - நூல் வெளியீட்டின் போது நூலாசிரியர் கலாபூஷணம், பிரம்மஸ்ரீ செ. ந. நடராஜ ஐயர் அவர்கள் உரையாற்றுவதையும், பிரம்மஸ்ரீ சண்முகரட்ன சர்மா, திணைக்கள பதில் பணிப்பாளர் திருமதி. ஆர். கைலாசநாதன், பிரதிப் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் ஆகியோருடன் கூட்டத்தினரில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.

---

தீயவர்களுக்கு அருகில் நல்லவர்கள் இருந்து புத்திசொன்னாலும், அவர்கள் ஏற்பதில்லை. அதன் விளைவு நாசமாகவே முடியும். மகாபாரதத்தில் துரியோதனனுக்கு நேர்ந்தது அதுவே.

# சித்தானைக்குட்டி சுவாமிகள்

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு நான்கு சித்தர்கள் ஒரே காலப்பகுதியில் வந்துள்ளார்கள். அவர்களில் ஒருவரே சித்தானைக்குட்டி சுவாமிகள். இவர் இலங்கைக்கு விசேடமாக வந்த சிறந்த ஞானியாவார்.

இந்தியாவில் இருந்து இங்ஙனம் வந்த சித்தர் பரம்பரையில் கடையிற் சுவாமி, நவநாதசித்தர், பெரியானைக்குட்டி, சித்தானைக்குட்டி சுவாமிகள் போன்றோர் இடம் பெறுகின்றனர். சித்தானைக்குட்டி சுவாமிகளின் வரலாற்றை சுருக்கமாக நோக்குவோம். தென்னிந்தியாவில் இருந்த இராமநாதபுர சிற்றரசருக்கு ஒரே ஒரு மகன். அவரது பெயர் கோவிந்தசாமி என்பதாகும். அரசகுடும்பத்தில் பிறந்து வாழ்ந்து வந்த கோவிந்தசாமிக்கு குறிப்பிட்ட காலப்பகுதியின் பின்னர், அரச போகங்களில் நாட்டம் ஏற்படவில்லை. உண்மை உணர்ந்த இவர் வேறு ஒரு வாழ்வை வாழ்வதற்கு விரும்பினார். அவரது உள்ளம் துறவை நாடியது. உலகப்பற்றுக்கள் அனைத்தையுமே துறந்தார். இதன் காரணமாக, இந்தியாவில் இருந்து இலங்கையிலே உள்ள கிழக்கு மாகாணத்தின், அம்பாறை மாவட்டத்திலுள்ள காரைதீவு என்னும் கிராமத்திலே வந்து வாழ்ந்தார். உண்மையில் இவரின் உள்ளம் தெளிவடைந்து விட்டது. நேரடியாகவே இறையியல் உணர்வு மிக்க இவர், இறைவனோடு தொடர்பு கொண்டார். இவர் உலக வாழ்க்கையையும் அதன் தன்மையையும் இயல்பையும் அறிந்தவர். பாச பந்தங்கள் என்பதைத் தெளிந்தவர். ஏனையோருக்கு விளங்காத விடயங்கள் இவருக்கு அதிகமாகத் தெரிந்திருந்தன. இவர் காரைதீவு வீதிகளில் எளிமையாக நாள்தோறும் உலாவந்தவர்.

ஒரு நிலையில் இவர் கோவணத் துடனும், சிலவேளைகளில், கோவண மின்றியும், மதுமோகத்திலும் புலால் உண்டும் வாழ்ந்து வந்த ஞானியாவார். அவரைச் சிலர் முழுமையாக விளங்கிக் கொள்ள வில்லை. குறிப்பாக, காரைதீவில் வாழ்ந்த மக்களே இவரைப்பற்றி அறியமுடியவில்லை. ஒரு பொருள் இருக்கும்போது அதன் பெறுமதி தெரியாது என்பார்கள். அதேபோல் மக்கள் அவரை விளங்காது பல்வேறு வகையாக வரைவிலக்கணப்படுத்தினர்.


- கே. கணேஷ்ராஜ் -
(விரிவுரையாளர் - தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)


தம்முடைய ஞான வலிமையினால், அவ்வூரிலேயே தமது சித்துக்கள் அனைத்தையும் வெளிப்படுத்தாது அயல் கிராமங்களிலும் சென்று பல சாதனைகளை (அற்புதம், சித்து) செய்துள்ளார். அந்த வகையில் அக்கரைப்பற்று, பனங்காடு, கோளாவில், கன்னங்குடா, தீவுமுனை, கல்முனை, ஏறாவூர் போன்ற இடங்களுக்கு அவர் சென்றுள்ளார். ஒரு முறை கல்முனையிலுள்ள ஒருவரின் வீட்டில் சுவாமி விபுலானந்தருக்கும் இவருக்கு மிடையில் விவாதம் நடைபெற்றுள்ளது. அதில் "நான்" என்ற சொல்லினுடைய அர்த்தத்தை இவர் சுட்டிக்காட்டி விளக்கியுள்ளார்.

சித்தர் எல்லாம் அறிந்தவர் என்பதால், தம்மைப் பூரணமாகச் சரணாகதி அடைந்தவர்களது துன்பங்களையெல்லாம் தாமே ஏற்று அனுபவித்து வந்தார்.

எப்பொழுதும் பக்தர்களுடைய ஆன்ம வளர்ச்சியிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தார்.

பூரண நம்பிக்கை உடையவர்களுடைய தவறுகள் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்வார். இவரைப் பூசித்தவருக்கு புண்ணியமும், தூசித்தவர்களுக்குத் துன்பமும் எப்பொழுதும் ஏற்படும். அவரது போதனையை ஒரு சிலரே கேட்டு வந்தனர். அதே போல் ஒரு சிலரே அவரைப் பூசித்தனர்.

## சித்தானைக் குட்டியின் சாதனைகள்.

இவர் வாழ்ந்த காலத்தில் இருந்த மக்களிடம் விசாரித்த போது, அவரைப்பற்றி பல விடயங்களைக் கூறுகின்றார்கள். இவரின் சித்துகள் பல என்றும், ஆனால் அவரை சிலர் தவறாக விளங்கிக் கொண்டனர் எனவும் சுட்டிக்காட்டினர். இவ்வகையில், இவரின் சித்துக்களாக பின்வருவன குறிப்பிடப்படுகின்றன.

தீப்பிடித்துப் பற்றிய கதிர்காமத்தல திரைச்சீலையை கல்முனைச் சந்தியில் நின்று கசக்கி அணைத்தமை.

திமிர்வாதக்காரர் நிமிர்ந்து நடக்கச் செய்தமை.

கதிர்காமக் காட்டில் வழிதப்பியவர்களுக்கு வழிகாட்டியமை.

சமைக்கப்பட்ட மரவள்ளிக் கிழங்குக்கறி ஒரு கிழமைக்கு சூடு ஆறாமல் இருக்கச் செய்தமை.

பைத்தியத்தை மாற்றிய பக்குவம்.

மன்னார்க் கடலில் அகப்பட்டவர்களை மீட்ட அதிசயம்.

தீவுமுனை வெளியில் மழை பெய்வித்த அதிசயம்.

கண்ணோயை உமிழ்நீரைக் கொப்பளித்து நீக்கியமை.

மண்டையில் தாமே வேப்பங்கட்டையால் அடித்து ஏற்படுத்திய காயத்தை, பின்பு வெற்றிலைத் தாம்பூலத்தால் காயச் செய்தமை.

பிள்ளைகள் இல்லாதவர்களுக்குப் பிள்ளைப் பேறளித்தமை.

மண்ணைக் கற்கண்டாக்கியமை.

ஒரு நாள் சித்தானைக்குட்டிச் சுவாமிகள் கல்முனைச் சந்தியில் தெரு ஓரத்தில் உட்கார்ந்து இருந்தார்கள். சில அடியார்கள் சுவாமியைச் சூழநின்றார்கள். சுவாமி முன்னிலையில் ஒரு அமைதி காணப்பட்டது. திடீரென உடுத்திருந்த வேட்டியை உரிந்து கசக்கத் தொடங்கினார். கூட நின்றவர்கள் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். "என்னடா பார்த்துக்கொண்டு நிற்கின்றீர்கள். கதிர்காமத்திரை தீப்பிடித்து எரிகிறது. கசக்கி அணையுங்களடா" என்றார். "இதை அணைப்பது எவ்வளவு கஷ்டம் தெரியுமோ" என்று கூறினார். கூடநின்றவர்கள் நிலை குலைந்து அங்கும் இங்கும் ஓடினார்கள். ஒருவராவது அணைக்க முன்வர வில்லை. பின்னர் சுவாமிகளே அதனைக் கசக்கி அணைத்தார்கள். சுவாமிகள் தகுந்த சந்தர்ப்பத்தில் வந்திருக்காவிட்டால், என்ன நிகழ்ந்திருக்குமோ என்று கற்பனை பண்ணிக்கூட பார்க்க முடியவில்லை என்று அந்த அன்பர் கூறினார். கல்முனைச் சந்தியில் சுவாமியை சந்தித்தவர்கள் சுவாமியின் மகிமையை ஓரளவு உணரத் தலைப்பட்டார்கள்.

ஒரு நாள் மன்னார்க் கடலில் மீன்பிடிக்க நால்வர் சென்றிருந்தனர். அவர்கள் நால்வரும் நான்கு நாட்களாக கடலிலிருந்து திரும்பவில்லை. எவ்வித செய்தியும் கிடைக்காததால் வீட்டில் உள்ளவர்கள் துக்கம் கொண்டாடினர். வீட்டில் ஒரே அழுகை ஒலியாக இருந்தது. சுவாமிகள் மன்னாருக்குச் சென்றிருந்த சமயம் இந்த வீட்டில் அழுகை ஒலிக்கு காரணம் என்ன என்று வினவினார்.

அவர்கள் உள்ளதைக் கூறினார்கள். சிறிது நேரம் கழித்து சுவாமிகள் அந்த வீட்டிற்குச் சென்றார்.

ஒரு தென்னை மட்டையை எடுத்து முற்றத்தில் "ஏலேலோ ஏலைலே" என்று கூறிய வண்ணம் தானே தண்டு வலித்துக் கீறினார். அரை மணித்தியாலமாக இது நிகழ்ந்தது. முற்றம் முழுவதும் புழுதிக் காடாக மாறிவிட்டது. வீட்டில் உள்ளவர்கள் இது ஏதோ பைத்தியம் என்று நினைத்தனர். சிறிது நேரத்தில் கடலில் காணாமல் போன நால்வரும் வந்தனர். அழுகை மகிழ்வொலியாக மாறியது. நால்வரும் சுவாமிகள் பாதத்தில் விழ்ந்து வணங்கினர். இந்தச் சுவாமிகள் இல்லாவிட்டால் நாங்கள் கடலில் ஆழ்ந்திருப்போம் என்றனர். சுவாமிகள் தகுந்த சந்தர்ப்பத்தில் வந்து காப்பாற்றினார் என்று கூறியதோடு, இவர் எப்படி எங்களை விட்டு இங்கே வந்து சேர்ந்தார் என்று ஆச்சரியமும் தெரிவித்தனர். இப்படியே ஏனைய அவரது சித்துக்களும் அற்புதமானவை.

மேற்கூறிய அனைத்துச் செயல்களும் தம்முடைய உள்ளுணர்வினைக் கொண்டு வெளிப்படுத்தியவையாகும். ஆனால், இது இலகுவான காரியமல்ல. இத்தகைய செயல்களை நிகழ்த்தியதற்கான சான்றுகள் உள்ளன. இன்று அவரை வழிபடுபவர்கள் இதனைப்பற்றி சரியாகக் கூறுகின்றனர். இத்தகையவற்றையெல்லாம் நிகழ்த்தியமை மட்டுமன்றி பின்னர் தான் இறக்கப்போகும் நேரம், காலம் எல்லாவற்றையும் முன்கூட்டியே கூறியவர், தாம் கூறியபடியே 10. 08. 1951 இல் சமாதி நிலை அடைந்தார்.

இவர் வாழ்ந்த அதே ஊரில் தான் அவரது சமாதியும், இராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரமமும், சுவாமி விபுலானந்தரின் பிறந்த வீடும் அமைந்துள்ளன. தற்பொழுதுங் கூட அக்கிராமத்தில் இம்மூன்றும் காணப் படுகின்றன. சிறப்பாக சித்தானைக்குட்டியின் சமாதியை ஒரு நினைவுச்சின்ன ஆலயமாகக் கொண்டு வழிபட்டு வருகின்றனர். இதைத் தரிசிப்பதற்கு அவ்வூரில் மட்டுமன்றி ஏனைய பல ஊர்களிலிருந்தும் மக்கள் அச்சமாதியை தரிசித்து வருகின்றனர் என்பது அவ்வூரின் பெருமைக்குரிய விடயமாகும்.

*******

## நாடகக்கலைஞர்களுடன் கலந்துரையாடல்





நாடகக் கலைஞர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது திணைக்கள பதில் பணிப்பாளர் திருமதி ஆர். கைலாசநாதன் உரைநிகழ்த்துவதையும், பிரதிப்பணிப்பாளர் திருமதி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர்கள் திரு. வி. விக்கிரமராஜா, திரு. குமார் வடிவேல் ஆகியோரையும் கலந்து கொண்ட கலைஞர்களில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.


# வாழ்ந்து பார்க்கலாம் வாருங்கள் !

வாழ்க்கை ஓர் அருமையான கலை. அதை அருமை பெருமையாக எண்ணி சந்தோஷமாக வாழ முற்பட வேண்டும். நாமும் சந்தோஷமாக வாழக் கற்று பிறரையும் சந்தோசமாக வாழவைப்பதே ஓர் அருங்கலை.அந்தக் கலையைப் பல்கலைக் கழகத்திலோ கல்லூரியிலோ கற்க முடியாது.

மற்றவர்களின் வாழ்க்கையில் இருந்தும், அது தரும் அனுபவங்களில் இருந்தும் பாடம் பெற்றுப் பயன் பெறுவதே புத்திசாலித் தனமாகும். பிரஞ்சு மொழியையும், கம்பியூட்டரையும் மூளையில் ஏற்றிப் படிக்கும் அளவுக்கு வாழ்க்கையில் கஷ்டப்பட்டுக் கற்றுக்கொள்ள நாம் தயாராயில்லை. "வாழ்க்கை ஒரு சுமை, என் பிறவியே வீண்" என்றே பெரும்பாலோர் புலம்பித் தள்ளுகிறோம். ஒரு மெஷினையோ, காரையோ இயக்கத் தெரிந்திருக்கிறோம், ஆனால் எத்தனை பேருக்குத் தங்களையே இயக்கவும், கட்டுப்படுத்தவும் தெரிந்திருக்கிறது? இறந்த காலத்தில் நடந்த கசப்பான நினைவுகளையும், எண்ணங்களையும் முதலில் முறியடிக்கப் பழக வேண்டும்.

கடந்த காலக் கசப்பான எண்ணங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தே நிகழ்கால நினைவுகளிலும் கசப்பு ஏற்றிக் கொள்கிறோம். "எங்க அப்பாக் காலத்தில் எத்தனை செல்வம் இருந்தது: இப்பொழுது என் வயிற்றுப்பிழைப்புக்கு நாயாக அலைகிறேன்." என்றும், "அவன் என்னை எவ்வளவு அவமானப்படுத்தி விட்டான்: செத்தால் கூட அவன் வீட்டுவாசலை மிதிக்க மாட்டேன்" என்றும் கசப்பான எண்ணங்களையே மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறோம்.

விஞ்ஞானி ஒருவர் ஒரு கிராமத்துக்குச் சென்றிருந்தார். அங்கே கூச்ச சுபாவமுடைய ஒரு விவசாயிடம் பேசமுற்பட்டு "இந்த வருட விளைச்சல் எப்படி? என்று கேட்ட பொழுது அந்த விவசாயி, "இந்த வருடம் விளைச்சலே இல்லை" என்று சொன்னான்.



ஏன் என்று கேட்ட பொழுது, "பாதியை வெட்டுக்கிளி தின்று தீர்த்துவிட்டது; மீதியைப் புயல் அழித்து விட்டது" என்றான். "அதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று கேட்ட பொழுது "ஒன்றும் இல்லை, இந்த நஷ்டத்தை நான் மறந்து விட நினைக்கிறேன்" என்றான் அந்த விவசாயி, எத்தகைய மனோபாவம் பாருங்கள்.

நாமோ, என்றோ நடந்த புயலின் கொடூர விளைவுகளை மட்டுமே இன்னும் பத்து வருடங்களுக்குப் பேசுவோம். இயற்கை தந்த பரிசு கொடுமையானது தான், அதற்காக கசப்பான எண்ணங்களை, நமக்கு ஏற்பட்ட நஷ்டங்களை ஓயாமல் நினைவு கூர்வதால், பேசுவதால் என்ன பயன்?
நேற்று நடந்த கசப்பான எண்ணங்களை நினைத்து நினைத்து இன்றைய வாழ்க்கையைக் கசப்பு நிறைந்ததாக ஆக்கிக் கொள்கிறோம். இன்று நன்றாக ஆரோக்கியமான மனநலத்துடன் நல்ல எண்ணங்களையும்

கொண்டு வாழ முற்பட்டால், ஒவ்வொரு கடந்த நாளும் சந்தோஷம் நிரம்பியதாக இருக்கும். அவ்வாறு வாழ முற்படும் பொழுது எதிர்காலமே நம்பிக்கை நிறைந்ததாக மாறும்.

ரவீந்திரநாத் தாகூர் தமது கீதாஞ்சலியில் இறைவனிடம் வேண்டுகிறார்: **"என்னுடைய பலவீனங்களை அடியோடு களைந்து எடுக்கச் சக்தியைக் கொடு. என்னுடைய சுக, துக்கங்களை ஒன்றாகப் பாவிக்க சக்தியைக் கொடு. என்னுடைய அன்பு, சேவையில் பலன் கனிய சக்தியைக்கொடு. தினசரி வாழ்க்கைப் பிரச்சனைகளிலிருந்து என் மனத்தை மேலாக்கச் சக்தியைக் கொடு."**

பாரதியாரும் **"சென்றதினிமீளாது ..............சென்றதையே சிந்தை செய்து ............... குமையாதீர்!.......இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நீவீர் .... தின்று விளையாடி யின்புற்றிருந்து வாழ்வீர்: தீமையெல்லாம் அழிந்துபோம், திரும்பிவாரா"** என்று கூறுகிறார். ஆகவே கடந்தக்காலக் கசப்பினை மனத்தில் ஏற்றி ரத்த அழுத்தமும், குடல் புண்ணையும் வரவழைத்துக் கொள்வதைவிட நாமும் மகிழ்ச்சியாய் இருந்து மற்றவர்களையும் மகிழ்வித்து நல்ல ஆரோக்கியமான மன நலத்தையும், உடல் நலத்தையும் பெற முயற்சிப்பதே அறிவுடைமையாகும்.

தொகுப்பு :- **அன்புச்செல்வன்**

---

## வஞ்சனை மறைந்துறையும்

நஞ்சுடமை தான்அறிந்து நாகம்கரந்து உறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு - நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத்து அவர்.

**பொழிப்புரை :** நாகபாம்பு தான் நஞ்சை உடைத்தாயிருத்தலை அறிந்து மறைந்து வாழும். நீர்ப்பாம்போ (நஞ்சின்மையால்) அஞ்சாமல் வெளியான இடங்களிலே கிடக்கும். இவை போலவே மனதில் வஞ்சகமுடையவர் தம்மை மறைத்து வாழ்வர். அவ்வாறில்லாதவர் தம் உள்ளத்தை மறைக்காது யாவருடனும் நன்கு வாழ்வர்.

**ஒளவையாரின் - 'மூதுரை'**

**விளக்கவுரை :** நாகபாம்பு மறைந்து வாழ்வதற்குக் காரணம் அதனிடம் இருக்கின்ற கொடிய நஞ்சே. அதே போல மனத்திலே வஞ்சகம் கொண்டவர்கள் எப்பொழுதும் தங்களை இனங்காட்டிக்கொள்ளாமல் மனத்தை மறைத்துத் தந்திரமாக வாழ்வார்கள். நீர்ப்பாம்பு யாருக்கும் அஞ்சாது வெட்ட வெளியில் கிடக்கும். ஏனெனில், அதனிடம் நஞ்சு இல்லை அதனால் தனக்கு யாராவது கெடுதல் செய்வார்களோ என்ற பயமுமில்லை. அதேபோல நெஞ்சில் வஞ்சகமில்லாதவர் உள்ளத்தை மறைக்காமல் மனம்திறந்து பழகுவார்கள்.

# நினைப்பது முடியும்

சில ஆதாரங்களை எடுத்துக் காட்டி நினைப்பது முடியும் என்று சொன்னால் நம்புவீர்களா?

சில பயிற்சிகளை எடுத்துச் சொல்லி இதைச் செய்து பாருங்கள் என்று சொன்னால் செய்துவர முடியுமா? நம்புங்கள், நினைப்பதை முடிக்கலாம்.

ஆன்மீகப் பாதையில்
வழி காண்போமா?

"ஒரு பொருளின் தன்மை பற்றி நாம் அறிந்து கொள்ளும் போது நாம் அதை வசப்படுத்துகிறோம் என்கிறார்கள் ஞானிகள் பஞ்ச பூதங்களாகிய நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் என்பவற்றைப் பற்றி நாம் பூரணமாக அறிந்து
கொள்ளும் போது நாம் அவற்றை, நம் வசப்படுத்துகிறோம்.

ஒரு பொருளைப் பற்றிய அறிவு, அதன் பல்வேறு பரிமாணங்கள் பல்வேறு கோணங்களிலிருந்து அதன் குணங்களைப் பற்றிய அறிவு, அதை உபயோகிக்கும் போது ஏற்படும் விளைவுகள் ஆகியவை பற்றி அறிந்திருக்க வேண்டும். சமீப காலமாக ஒரு பொருளைப் பற்றிய அறிவு என்பதற்குப்பதிலாக ஒரு பொருளைப் பற்றிய விழிப்புணர்வு (Awareness) என்று சொல்கிறோம். விழிப்புணர்வு என்பது துடிப்பு நிலை. அதைப்பற்றி ஆழமாக அறிதல்; அதன் உள்ளமைப்பு, வடிவம் அதன் தன்மை பற்றிய பூரண அறிவு, அதாவது நாம் எவ்வளவு தெரிந்துகொள்ள முடியுமோ அவ்வளவு. இதை எப்படித் தெரிந்து கொள்ள முடியும்? எப்படி ஒரு பொருளின் தன்மை பற்றிய பூரண அறிவைப் பெற முடியும்? இங்கே இரண்டு மூன்று விஷயங்கள் இருக்கின்றன.

எதைப்பற்றி நாம் சிந்திக்கிறோமோ அதுவாக நாம் மாறுகிறோம். இது மனவியல் உண்மை; அதாவது கிழக்கத்தைய நாடுகள் கண்ட உண்மை; சொல்லப் போனால் உபநிடதம் கண்ட உண்மை.

அந்தக் காலத்தில் முனிவர்களும், யோகிகளும் பிரமத்தை அறிய விரும்பினார்கள். கடைசியில் அதுவாகவே மாறினார்கள். எந்த குணங்களைப்பற்றிய தாகம் ஆழமாக அடிமனதில்
ஓடுகிறதோ ஓடிக் கொண்டிருக்கின்றதோ, அதுவாகவே நாம் மாறுகிறோம்.
அதைப்பிடித்து இழுக்கிறோம்; நம் வசமாய் விடுகிறது. "பணக்காரனாக வேண்டுமா, பணத்தைப்பற்றிச் சிந்தி; பணக்காரர்களுடன் உறவுகொள்; பணம் புழங்குகிற இடத்தில் வாழ்ந்து வா.

**டாக்டர்
எம். எஸ். உதயமூர்த்தி**

"ஆன்மீகத்தில் சித்திகள் பெற வேண்டுமா? ஆன்மீக நூல்களைப் படி; சிந்தி. ஆன்மீக நிலையில் உள்ளவர்களுடன், யோகிகளுடன், சித்தர்களுடன் பழகிவா; அவர்களை நாடு, அவர்களிடம் போய் சாதகர்களாக - மாணவர்களாகச் சேர்."

எதை எண்ணுகிறோமோ அதுவாக மாறுகிறோம் என்பது ஒன்று.
அடுத்து ஒரு விஷயத்தைப்பற்றி அறிந்து கொள்ள நாம் பலரையும் - விவரம் தெரிந்தவர்கள் எல்லோரையும் அது



பற்றிக் கேட்கிறோம். இத்தகைய அறிவைத்தான் நம் முன்னோர் நூல்கள், ஏடுகள் வாயிலாக விட்டுச் சென்றிருக்கிறார்கள். அவற்றைப் படிக்கின்றோம்.

பரீட்சைக்குச் செல்லும் மாணவன் என்ன செய்கிறான்? அவன் தன்னைத் தயார் நிலையில் வைத்துக் கொள்கிறான். நன்றாகப் பரீட்சை எழுத வேண்டும் என்பது நமது எண்ணமாக மட்டும் இல்லை, நம் உடம்பின் ஒவ்வொரு "செல்" லிலும் அது குரல் கொடுக்கிறது. நாமே அதுவாக மாறுகிறோம். இது நம் ஜீவனிலிருந்து புறப்படுகின்றது. இது நம்மைத் தயார் நிலையில் வைக்கிறது. இது ஜீவதாகமாக ஆதிமூலமே என்று அலறியதே யானை, முதலையால் கைப்பற்றப்பட்ட போது – அந்தக் குரலாய் எழுகிறது நம்முன். இது தயார்நிலை.

என்ன சொல்கிறார்கள் நம் பெரியவர்கள்?
"சீடன் தயார் நிலையில் இருக்கும் போது குரு தோன்றுவார்" என்று சொல்கிறார்கள். "எனக்கு ஆன்மீக தாகம் இருக்கிறது. எல்லா நூல்களையும் பார்க்கிறேன், படிக்கிறேன், எல்லாத் தலங்களையும் சித்தர்களின் சமாதிகளையும் சுற்றி வருகிறேன்;

உட்கார்ந்து தியானம் செய்கிறேன், தேடல் தணியாத தாகமாக இருக்கிறது. ஏன் தேவன் தோன்றவில்லை? ஏன் குரு என்னை ஆட்கொள்ளவில்லை? ஆசீர்வதிக்க என் முன் தோன்ற வில்லை?" கேள்விகள்; கேள்விகள்.

திரௌபதை துச்சாதனனால் துகிலுரியப்பட்டாள் அரச சபையில். அந்த அவலமான, பாபமான காட்சியை ஒரு கணம் கண்முன் கொண்டு வாருங்கள். அவள் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள மார்பைக் கையால் போர்த்திக் கொண்டாளாம்.

"கண்ணா!" என்று குரல் கொடுத்து அலறினாள். எனினும் தன் கைகளால் மார்பைப் போர்த்திக்கொண்டாளாம். மேலும் துகிலுரிதல் நடந்த போது "பரந்தாமா" என்று இரு கைகளையும் உயரே கூப்பி அவனை நம்பி, கடைசி நிலைக்குப் போனாள். அவள் ஆடைகுறைவில்லாத ஆடையாக அவள் உடலை மறைத்தவண்ணம் நீண்டு கொண்டேயிருந்தது.

அது ஆன்மாவின் குரல்; ஆன்மாவின் அலறல். ஆதிமூலமே என்ற பிளிறல். அது கிளம்பும் போது எந்தக் குருவை நாம் சந்திக்க விரும்புகிறோமோ அவரே நம் வீட்டுக்கு வருகிறார். நாம் விரும்பும் எல்லாச்சம்பவங்களும் நம்மைச் சுற்றி நிகழ்கின்றன. பஞ்ச பூதங்களும் நம் சொல்லுக்குக் காத்திருக்கின்றன. எதை அழைக்கின்றோமோ அது வருகிறது; அது கிடைக்கிறது. எப்போது? சீடன் தயாராகும் போது...

"அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்" என்கிறார் கம்பர். அண்ணல் நோக்கினான். அவனது பார்வையால் அவளும் – சீதையும், – பாதிக்கப்பட்டாள். இதைத் தான் ஆங்கிலத்தில் (Observer Participancy) பார்ப்பவர்களும் தங்கள் பார்வையால் பார்க்கப்படும் பொருளைப் பாதிக்கிறார்கள் என்று விளக்குகிறார்கள். தெளிவாகச் சொன்னால், நாம் ஒரு பொருளைப் பார்க்கிறோம். நம் பார்வையால் அந்தப் பொருளில் ஒரு தாக்கம் ஏற்படுகின்றது. அதுவும் நம் விருப்பத்திற்கேற்ப அசைந்து கொடுக்கின்றது, அதுவும் நம் செயலில் பங்கேற்கின்றது.

பார்ப்பவன் மாத்திரம் பார்க்கவில்லை, பார்க்கப்படும் பொருளும் அந்தப் பார்வையில் பங்கு பெறுகிறது. இந்த விஞ்ஞான உண்மையின் அடைப்படையில் நாம் ஒரு பொருளைப் பற்றி ஒரு மனிதரைப்பற்றி, செல்வத்தைப்பற்றி அல்லது நம் குருவைப் பற்றி சிந்திக்கிறோம். அல்லது எதிர் பார்க்கிறோம் என்றால் என்ன ஆகும்?
பணமும் சரி, நமது குருவும் சரி, நமது எதிர்பார்ப்பிற்கேற்ப நம்முடன் ஈடுபடுகிறார்கள். இது தான் உண்மை.
தத்துவமஸி "நாம் அதுவாக மாறுகிறோம்" என்கிற தத்துவத்தின்படியும், "சீடன் தயாராக இருக்கும் போது குரு தோன்றுவார்" என்ற ஆதிமூலத் தத்துவத்தின் மூலமும், பார்வை யாளருடன் பார்க்கும் பொருளும் பங்கு கொள்கிறது என்ற விஞ்ஞானக் கோட்பாட்டின் மூலமும் நமக்கு விளங்குவது ஒரே ஒரு விஷயம் தான். நினைக்கிற முறையில் நினைத்தோமானால் நினைப்பது முடியும் என்பதுதான்.

காஞ்சிப் பெரியவர், சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள், ஆதிசங்கரர் பிரச்னோத்திரமாலிகா
(பிரச்ன - கேள்வி; உத்தரம் = பதில்) என்ற நூலில் இதற்கான பதிலைக் கூறுகிறார். எதையாவது நினைத்து அப்படித் திரும்பத் திரும்ப அதையே கேள்விக்கேட்டுக் கொண்டிருந்தால், அதாவது அறிவால் ஒரு விஷயத்தை ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருந்தால் - சரியான பதில் கிடைக்கும்" என்பது தான் அது. "கேள்விதான் - அந்தக் கேள்விதான் - பதில் தரும், அதாவது ஆத்ம சிந்தனை எப்போதும் கொஞ்சமாவது இருந்து கொண்டிருக்க வேண்டும்" என்கிறார் பெரியவர்.

நினைவில் கொள்ளுங்கள்: விசாரிக்கும் போது அவை வெளிப்படுத்தப்படுகின்றன.

பகவான் ரமணருடைய அணுகு முறையும் அதுதானே! பதினாறு வயது இளைஞருக்கு - ரமணருக்கு - செத்துப் போவது போன்ற ஓர் அனுபவம் ஏற்படுகிறது. கேட்கிறார், "யார் செத்துப் போவது? இந்த உடலா? நானா?" இந்தக்கேள்விகள் தான் அவருக்கு விடைதந்தன. "நீ மெய்யுணர்வு. மூலத்தின் ஒரு பகுதி சாவதில்லை" என்ற விடை.

ஒன்றை நினைவு கொள்ள வேண்டும். நாம் பொருளைப் பற்றி எண்ணினோமானால் பொருளுடன் ஒன்றாகிவிடுவோம். காமத்தைப் பற்றி எண்ணங்கள் விருத்தியாகுமானால், நாம் காம உணர்வின் உந்துதலுக்கும், செயலுக்கும் ஆளாவோம்.

விரும்பியதை அடைய முயல்பவர்கள் எண்ண விருத்தியின் விளைவுகளைப் பூரணமாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஏனெனில் எண்ணங்களை நல்லவற்றிற்கும் உபயோகிக்கலாம். அற்ப சுகங்களுக்கு ஆசைப்பட்டு நம்மை அழித்துக்கொள்வதிலும் இறங்கலாம். இது எச்சரிக்கை.

நினைப்பதை முடிப்பதில் அதிகம் பேர் கேள்விப்பட்டிராத ஒரு சொல் இருக்கிறது. அதை ஆழ்நிலைத்தியானம் பற்றி எழுதும் ராஜா ராம்ஜி அவர்களும் ராஜயோகம் பற்றி எழுதும் சுவாமி சித்பவானந்தர் அவர்களும் இதைப்பற்றி குறிப்பிடுகிற விஷயம். நாம் பார்ப்பது - நாம் வாழ்வது - எல்லாம் இந்த உலகில்; நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் என்ற ஐந்து பொருள்களால் ஆன உலகம். இந்தப் பொருள்கள் அனைத்தும் இரட்டைத்தத்துவ நிலையில் இருக்கின்றன.

அதாவது பொருள் - சக்தி, ஒளி - இருள், பிறப்பு - இறப்பு, ஆண் - பெண், இன்பம் துன்பம், லாபம் - நஷ்டம், தர்க்கவாத அறிவு - உள்ளுணர்வு, நேர் மின்சாரம் - எதிர்மின்சாரம், பொருள் உலகம் - சூக்கும உலகம் என்று ஆக்கப்பட்டிருக்கின்றன. இந்த இரட்டை நிலையை யார் உருவாக்கியது?

அதாவது இவ்வுலகம் - பிரபஞ்சம் - தோன்றுவதற்கு முன்னால் ஒரு நிலை இருந்திருக்க வேண்டும். அந்த நிலையைத்தான் மூலம் என்றும், தோன்றா நிலை(Un Manifest) என்றும், தூய அறிவாற்றல் (Pure Consciousness) என்றும் கூறுகிறார்கள்.

கடவுள், ஆண்டவன் என்றெல்லாம் சொல்லி விட்டால் எல்லோருக்கும் புரிந்து விடும் என்று அப்படிச் சொல்கிறார்களோ என்று ஒரு சந்தேகம். எனினும் இந்த விளக்கங்கள், வார்த்தையால் சொல்லமுடியாததை நமக்கு ஓரளவு தெளிவுபடுத்த உதவுகின்றன.

இன்றைய மேனாட்டு அறிஞர்களை எல்லாம் மிஞ்சிப்போய், நமது சித்தர்கள் இதை "வெட்டவெளி" என்கிறார்கள்.

*"வெட்ட வெளிதனையே*
*மெய்யென்று இருப்பார்க்கு*
*பட்டயம் ஏதுக்கடி - குதம்பாய்*
*பட்டயம் ஏதுக்கடி?"*

என்று குதம்பைச் சித்தர் பாடுகிறார்.

"வெட்டவெளிதான் மெய் - உண்மை என்று அவன் கண்டுபிடித்து விட்டான். அவனுக்கென்ன ஸ்ரீலஸ்ரீ அல்லது தவத்திரு என்றா பட்டங்கள் வேண்டும்?"
கேட்கிறார் சித்தர்!

வெட்டவெளி நிலை என்றால் தோன்றா நிலை, தோற்றத்திற்கு முந்தைய நிலை; சிருஷ்டிக்கு முந்திய நிலை.

இதை, தியானத்தின் மூலம் நாம் அடையலாம், இது எண்ணமற்ற நிலை. தொடக்க இருப்பு நிலை "எண்ணமற்ற நிலை என்றால் ஜடம் போன்று கிடப்பது என்று அர்த்தமில்லை. எண்ணமற்ற நிலை எய்த எண்ணம் முழுவதும் வசப்பட்டாக வேண்டும்" என்று எழுதுகிறார் சுவாமி சித்பவானந்தர்.

மேலே - மிக மேலே - எண்ணமற்ற நிலை இருக்கிறது. அதிலிருந்து கீழே சிருஷ்டி தொடங்குகிறது. பிறகு கீழே பஞ்ச பூதங்களால் ஆன இவ்வுலகம் இருக்கிறது. சிருஷ்டிக்கு முன்னால், சிருஷ்டிக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. இந்த இடத்தில் பல எண்ணங்கள் - சங்கல்பங்கள் - விதைகளாக எஞ்சி நிற்கின்றன.

இவ்வுலக எண்ணங்களிலிருந்து மேலே செல்லும் மனிதன் சிருஷ்டி நிலைக்குச் செல்கிறான். சிருஷ்டிக்கு முன் உள்ள ஒரு நிலைக்குச் செல்கிறான், அதையும் கடந்து மேலே செல்லும்போது தான் எண்ணமற்ற எண்ணங்களை வென்ற - தூய அறிவாற்றல் நிலையை அடைகிறான்.

அட்டமா சித்திகளைப் பயில்பவர்கள் பிரகிருதி என்ற பொருள் உலகிலிருந்து மேலே சிருஷ்டியின் தொடக்க நிலைக்குச் செல்லும்போதும் - அல்லது தோன்றா நிலையிலிருந்து கீழே இறங்கி வரும் போதும், இருக்கின்ற இடைநிலையில் எண்ணங்கள் - சங்கல்பங்களை - விதையுங்கள் என்று சொல்கிறார்கள். இதற்குத் தான் சம்யமம் என்று பெயர்.

எந்த இடத்தில் எண்ணங்களை விதைக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள். பக்குவப்பட்ட மண்ணில்தான் விதைகிளம்புவது போல, ஒன்றிய சமாதி நிலையிலிருந்து இறங்கும் போது சங்கல்பம் செய்து கொள்வோமானால் அந்தச் சங்கல்பம் இந்தப் பொருளுலகிலும் - புலனாகாத உலகிலும் - சித்தியாக மலர்கிறது.

மனிதர்கள் அனைவரும் - நினைப்பது முடியும் என்று சித்திகளை அடைந்து விட முடியுமா? மனத்தை வென்றவர்களால் தான் பஞ்ச பூதங்களை வெல்ல முடியும்;

வசப்படுத்த முடியும். ஆழ்நிலைத் தியானத்தில் இருந்து வெளிவரும் தொடக்க நிலையில் இரண்டு நிகழ்த்தலாம். ஒன்று "மேலிருந்து நம்மை வழிநடத்தும் ஆணைகள் என்ன?" என்று எதிர்பார்த்தால் எது கிடைக்கும். அல்லது எண்ணமற்ற நிலையிலிருந்து இறங்கி சங்கல்பம் செய்து கொள்வோமானால் எண்ணம் (சம்யமம்) நிறைவேறும். நிபந்தனைகள் கடுமையானவைதான். இது ஏதோ போகிற போக்கில் செய்கிற விஷயமில்லை.

நம்மை யார் என்று அறிந்துக் கொள்ளாமலே வாழ்க்கை நடத்துகிறோமே, "நம்முள் யார் இருக்கிறார்? எப்படிப்பட்ட மாபெரும் சக்தி இருக்கிறது?" என்பதைப் புரிந்து கொள்ள வேண்டாமா? அதற்கான வழிமுறை இது !

"இது இப்படி" என்ற அறிவு, விழிப்புணர்வு இருக்கிறதே அதுவே பாதி வெற்றி என்கிறார்கள் அறிஞர்கள். எனவே இன்னும் முழுமையை நோக்கி நடை போடுவோம்!

நன்றி : அமுதசுரபி

# இந்துசமயச் சொற்பொழிவு




இந்துசமயச் சொற்பொழிவு நிகழ்ச்சியில், புலவர் தட்சணாமூர்த்தி அவர்கள் உரை நிகழ்த்துவதையும் கலந்து கொண்ட கூட்டத்தினரின் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். திணைக்கள பதில் பணிப்பாளர் திருமதி. ஆர். கைலாசநாதன், பிரதிப் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

**கல்வியின் பயன் அறிவு; அறிவின் பயன் பண்பு; பண்பில்லாத அறிவினால் பயனில்லை. பண்பில்லாதவன் எவ்வளவு அறிவு பெற்றிருந்தாலும் மரத்துக்குச் சமமாவான்.**

# சும்மா இருப்பது !

- சுவாமி சின்மயானந்தா -

கோவில் ஒன்றைச் சுற்றி விசாலமான காற்றோட்டமான பிரகாரம் ஒன்று இருந்தது. ஒரு நாள் அந்தக் கோவிலுக்கு ஒரு சாமியார் வந்து சேர்ந்தார். ஒரு பக்கமாக எதுவும் பேசாமல் உட்கார்ந்துக் கொண்டார். பசி வேளையிலும் கூட யாரிடமும் எதுவும் கேட்கவில்லை.

கோவில் குருக்கள் அவரைப் பார்த்தார். சாமியார் எதுவும் கேட்காததே அவருடைய பச்சாதாபத்தைத் தூண்டிற்று. கொஞ்சம் பிரசாதம் கொண்டு வந்து அவருக்குக் கொடுத்தார். சாமியார் அதை எடுத்து சாப்பிட்டு விட்டு, கையைக் கழுவிக் கொண்டு வந்து உட்கார்ந்து கொண்டார். இரவு நேரம் ஆயிற்று. சாமியார் கண்மூடி மௌனமாக இருந்தார். விடியற் காலையில் எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு மறுபடியும் உட்கார்ந்து கொண்டார்.

இப்படி இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. சாமியார் யாருடனும் பேசவில்லை. அந்தக் கோவிலுக்கு ஓர் நிர்வாக அதிகாரி இருந்தார். அரசாங்க சம்பளம் வாங்குகிறவர். சட்ட திட்டங்கள் தெரிந்தவர். சாமியாரை இரண்டு நாட்களாக அவர் கவனித்துக் கொண்டு இருந்தார். அவர் மனதில் என்னவோ சந்தேகங்கள் உண்டாயின. குருக்களைக் கூப்பிட்டு அனுப்பினார்."அந்த சாமியார் இப்படி இரண்டு நாட்களாக வந்து பழியாக உட்கார்ந்திருக்கிறாரே, கவனித்தீரா" ?



"கவனித்தேன். ஆனால் அவர் என்னவும் செய்ய வில்லையே?"

"அதுதான் ஐயா ஆபத்து. இப்படியே உட்கார்ந்திருந்தால் அவர் கோவில் தன்னுடையது என்று சொந்தம் கொண்டாடுவார். இந்த நாளையச் சட்டங்களின் சிக்கல்கள் உமக்குத் தெரியாது. அவரை எழுந்து போகச் சொல்லும்."

"அவர் தப்பாக எதுவும் செய்யவில்லையே? நான் எப்படி அவரைப் போகச் சொல்வது?"

"சரி அவருக்கு சாப்பிட எதுவும் கொடுக்காதீர். தன்னால் கிளம்பிப் போய்விடுவார்."

"அது எப்படி முடியும்? கோவில் பிரசாதத்தைக் கொடுக்கக் கூடாது என்று நீங்கள் உத்தரவு போடலாம்.

நான் என் வீட்டிலிருந்து கொஞ்சம் உணவாவது கொண்டு வந்து கொடுக்காமல் இருக்க முடியாது."

அதிகாரிக்கு கோபம் வந்தது: "நீர் என்ன செய்வீரோ எனக்குத் தெரியாது. அந்தச் சாமியாரை வெளியேற்ற வேண்டும்." என்று கூச்சல் போட்டார். குருக்கள் பணிவோடு இடுப்பில் இருந்த கொத்துச் சாவியை எடுத்து அவர் முன்னால் வைத்தார். "ஐயா! அது என்னால் முடியாது. நான் வேண்டுமானால் விலகிக் கொள்கிறேன். என்னை அனுப்பிவிடுங்கள்." என்று சொல்லிவிட்டார். அதிகாரி அசந்து போனார். அந்தக் குருக்கள் மாதம் ஏழு ரூபாய் சம்பளத்துக்கு நேரக் கணக்குப் பார்க்காமல் பொறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தார்.

அவரை அனுப்பி விட்டால் அந்தச் சம்பளத்துக்கு, அவ்வளவு ஒழுங்காக வேலை செய்பவர் கிடைப்பாரோ, மாட்டாரோ?

"சரி நீர் போம். நான் கவனித்துக் கொள்கிறேன்." என்று தானே சாமியாரிடம் போனார்: "யார் நீர்? எங்கே வந்தீர்? இங்கே மூன்று நாட்களாக என்ன செய்கிறீர்?" என்று கேள்விகளை அடுக்கினார். சாமியார் பதிலே சொல்லவில்லை. விரல்களை மடக்கி "ஐந்து நிமிடங்கள் இங்கே பேசாமல் உட்காருங்கள்!" என்று ஜாடை காட்டினார்.

அதிகாரிக்கு பதட்டம் அடங்கவில்லை. இருந்தாலும் பல்லைக்கடித்துக் கொண்டு உட்கார்ந்தார். ஐந்து நிமிடங்கள் போவது அவருக்குப் பெரிய சோதனையாக இருந்தது. மறுபடியும் எழுந்து நின்றார். சாமியாரை விசாரித்தார், சாமியார் அசையவில்லை: "கொஞ்சம் நேரம் உட்காரும். சொல்கிறேன்" என்பது போல ஜாடை காட்டினார்.

அதிகாரி மீண்டும் உட்கார்ந்தார். வாய் பேசாமல், ஒன்றும் செய்யாமல் அவரால் உட்கார முடியவில்லை. ஐந்து நிமிடங்கள் ஆவது யுகம் கழிவது போலத் தோன்றிற்று. எழுந்து சாமியாருக்கு பெரிய கும்பிடு போட்டு விட்டு, கிளம்பிப் போய் விட்டார். குருக்களைக் கூப்பிட்டனுப்பினார்: "ஐயா! அந்த சாமியார் இஷ்டப்படி உட்கார்ந்துக் கொண்டு இருக்கட்டும். அவரை ஒன்றும் செய்ய வேண்டாம். நீர் பிரசாதம் கொடுக்கலாம். எனக்கு ஆட்சேபனை இல்லை" என்றார்.

குருக்களுகக்கு வியப்பு உண்டாயிற்று: "சாமியாரிடம் பேசினீர்களா? திடீரென்று இது என்ன மாற்றம் ஐயா?" என்று கேட்டார். "உமக்குத் தெரியாது. நான் இரண்டு தடவை ஐந்து நிமிஷம் பேசாமல், ஒன்றும் செய்யாமல் உட்கார்ந்திருந்து பார்த்தேன். என்னால் முடியவே இல்லை. உடம்பு அலைபாய்ந்து விட்டது. அந்தச் சாமியார் மூன்று நாட்களாக அந்த உடம்பையும் மனசையும் அடக்கி மௌனமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறாரே? எவ்வளவு பெரிய சாதனை அது? அதற்காக எதை வேண்டுமானாலும் கொடுக்கலாம்.!" என்றார் நிர்வாக அதிகாரி. சும்மா இருப்பது என்பது எளிதல்ல. செயல் அடங்கிய சாந்தி ஒரு மனநிலை. அந்த நிலையில் மனிதன் வாழும் போது, ஒரு முழுமையான துயரற்ற மௌனம் தன்னுள்ளே இருப்பதை உணர்கிறான்.

இன்றைய பொழுது இன்னும் சிலமணித்தியாலங்களில் " நேற்று " ஆகிவிடும். நல்ல எண்ணங்களைச் சிந்திப்பது, உயர்ந்த பணிகளில் ஈடுபடுவது என்பதை இன்றே, இப்போதே தொடங்கிவிடவேண்டும்.

**இளைஞர்க்காக :**

# வெற்றியை நோக்கி நடை போடுங்கள் ...

இலட்சியத்தை அடைய கடினமாக உழைக்க வேண்டும். சுலபமாக ஒருவன் செல்வத்தையும், புகழையும் அடையமுடியாது. அயராத உழைப்பு ஒன்றின் துணை கொண்டு தான் ஒருவன் பல புதுமைகளைக் கண்டு பிடிக்கமுடியும்.

மற்றவர்களுடைய உழைப்பைவிட எவனுடைய உழைப்பு சிறந்ததாக இருக்கிறதோ, அவனுக்குத்தான் புகழும், பெரிய பதவியும் கிட்டும். வாழ்க்கையில் பல புதுமைகளைக் கண்டு பிடித்த பெரியவர்களின் வாழ்க்கையை ஊன்றிக் கவனித்தால் - அவர்கள் அனைவரும் இரவும் பகலும் தமது இலட்சியத்தை அடையக் கடினமாக உழைத்தவர்களாகத் தான் இருப்பார்கள்.

ஒரு சமயம், புகழ்பெற்ற ஓர் ஆராய்ச்சியாளரிடம் வெற்றிக்கு இட்டுச்செல்லும் வழிகளைப் பற்றிக் கூறும்படி சிலர் கேட்டார்கள்.

அதற்கு அவர், "வெற்றிக்கு அழைத்துச்செல்ல மூன்று வழிகள்தான் இருக்கின்றன. அவைகளின் பெயர்கள் "உழைப்பு, உழைப்பு, உழைப்பு" என்று பதில் கூறினார்.

## அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும்:

எருதுகூடத்தான் இரவும் பகலும் உழைக்கின்றது. ஆனால் அதற்குப் புகழும் செல்வமும் கிடைப்பதில்லை.

ஒருவன் விறகு வெட்டுகிறான், கடினமாக உழைக்கிறான். அதே வேலையை அவன் வாழ்நாள் முழுவதும் செய்து வந்தால் அவன் சாதாரண விறகு வெட்டியாகத் தான் வாழவேண்டியிருக்கும். விறகுவெட்டியின் உழைப்பில் அறிவு கலந்திருப்பதில்லை. ஆராய்ச்சியாளனுடைய உழைப்பில் அறிவு கலந்திருப்பதால் அவனுக்குப் புகழ் கிட்டுகிறது.

உழைப்பில் அறிவு அதிகமாக அதிகமாக, கிடைக்கும் புகழும் அதிகரித்துக் கொண்டே செல்லும். ஒரே வேலையை தினமும் செய்து வருபவன் வாழ்க்கையில் கட்டாயமாக முன்னேற முடியாது. பல புதிய காரியங்களை தைரியத்துடன் செய்ய ஆரம்பித்து புதிய அனுபவங்களைத் தேடிக் கொள்ள வேண்டும்.

நிறையப் படித்த ஒருவன் தன் அறிவையும் செயல் திறமையையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

பல அறிஞர்களுடன் பழகி தன் அறிவாற்றலை - கற்பனையின் தரத்தை - உழைப்பை - உயர்த்திக்கொள்ள வேண்டும்.தன் அறிவை கூர்மையாக்கிக் கொண்டவனுக்குத்தான் மற்றவர்களுக்குப் புலப்படாத புதிய விஷயங்கள் தென்படும்.

## நேரத்தை வீணாக்காமல் அதை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

வாழ்க்கையில் வெற்றி கண்டவர்கள் நேரத்தின் மகிமையை நன்கு உணர்ந்து கொண்டவர்களாகத்தான் இருப்பார்கள். கடவுள் அனைவருக்கும் சமமான நேரத்தைத்தான் கொடுத்திருக்கிறார்.
புத்திசாலி அல்லது பணக்காரன் என்பதற்காக கடவுள் அவர்களுக்கு ஒவ்வொரு நாளிலும் சில மணி நேரத்தை அதிகமாகக் கொடுத்துவிடவில்லை.
சாதாரண மனிதன் தூங்குவதிலும், அரட்டை அடிப்பதிலும், தன் பொன்னான நேரத்தை வீணாக்குகிறான்.

அதற்கு மாறாக பெரிய மனிதர்கள் தங்களுடைய உயர்ந்த இலட்சியங்களை அடையும் முயற்சியில் ஒவ்வொரு விநாடியையும் நன்கு உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள்.

சொத்து போனால் அதை மீண்டும் சம்பாதித்துவிட முடியும். ஆனால் நேரத்தை மீண்டும் மீட்க முடியாது. நேரம், பொன்னைவிட அதிகம் மதிப்பு வாய்ந்தது. நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளுபவனால்தான் மாபெரும் காரியங்களைச் செய்து முடிக்க முடியும்.

ஒருவன் தன் நேரத்தை - அதிலும், குறிப்பாக தன் ஓய்வு நேரத்தை - எப்படி பயன்படுத்திக்கொள்கிறான் என்பதை பொறுத்துத்தான், அவன் வாழ்க்கையில் சாதிப்பவைகள் அமையும்.

## தன்னைத் தானே குறைவாக மதிப்பிட்டுக் கொள்ளக் கூடாது.

"மற்றவர்கள் செய்வதை என்னாலும் செய்து காட்ட முடியும். மற்றவர்களுக்கு நான் எந்தவிதத்திலும் தாழ்ந்தவன் அல்ல. ஏன், மற்றவர்களைவிட இன்னும் சிறந்த முறையில் கடுமையாகக் காரியங்களை என்னால் சுலபமாகச் செய்யமுடியும்" என்று நம்பிக்கையுடன் செயல்படுபவனுக்குத்தான் வெற்றித் தேவதை மாலை சூட்டுவாள்.
தன் மேலேயே நம்பிக்கையில்லாதவனை நம்பி யாரும் பெரிய வேலையைக் கொடுக்க மாட்டார்கள்.
ஒருவன் தனக்குத் தானே நண்பனாகச் செயல்பட வேண்டும். தனக்குத் தானே விரோதியாகச் செயல்படுபவனுக்கு வாழ்க்கையில் எப்படி வெற்றி கிட்ட முடியும்?

நம்பிக்கையுடன் செயல்படாதவர்களுக்குக் கட்டாயம் வாழ்க்கையில் ஏமாற்றமும் தோல்வியும் தான் ஏற்படும்.

## எதிர்ப்புகளைக் கண்டு கலங்கக் கூடாது.

வாழ்க்கையில் முன்னேற ஆசைப் படுபவனுக்கு நிறைய எதிர்ப்புகளும், ஏமாற்றங்களும் ஏற்படுவது இயற்கை.

எதிர்ப்பையும், ஏமாற்றத்தையும் கண்டு பயந்து முயற்சி செய்வதையே விட்டுவிடுபவன், மற்றவர்கள் சொல்லும் வேலைகளைச் செய்து வரும் சாதாரண ஊழியனாகத்தான் உருவெடுக்க முடியும். பெரிய வேலைகளைச் செய்து முடிக்க ஒருவன் நிறையக் கஷ்டப்பட வேண்டியிருக்கும். ஆனால் அதைச் செய்து முடித்த பின்பு கிடைக்கும் புகழ் தென்றலாக வந்து அவனை மகிழ்விக்கும்.

மற்றவர்கள் மதிக்கும்படி வாழ விரும்புகிறீர்களா? வாழ்க்கையில் அனைத்தும் பெற்று சீரும் சிறப்புடன் வாழ விரும்புகிறீர்களா?

நீங்கள் வாழ்க்கையில் புதியவைகளைக் கண்டுபிடிக்க விரும்பினால் உபயோகமின்றிக் கழித்த கடந்த காலத்தை மறந்து விட்டு இந்த வினாடியில் இருந்து பாடுபட்டு உழைக்க ஆரம்பியுங்கள்.
வெற்றிக்குச் செல்லும் வழி மிகவும் சுலபமானது. முதலில் ஓர் இலட்சியத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அடுத்ததாக அதை அடைய ஒரு திட்டத்தை வகுத்துக்கொள்ள வேண்டும். அதன்பிறகு தான் வகுத்த திட்டத்தின்படி இலட்சியத்தை அடைய மிகவும் பாடுபட்டு உழைக்க வேண்டும். இந்த வழிமுறையைப் பின்பற்றுபவர்கள் தான் வெற்றி வீரர்களாக உருவெடுப்பார்கள்.

தோல்வி, அவமானம், ஏமாற்றம் போன்றவைகள் குறுக்கிடும்போது உழைப்பை நிறுத்தாமல் உறுதியான நம்பிக்கையுடன் முன்னேறினால் சரித்திர புருஷர்களாக நீங்களும் உருவெடுக்க முடியும்.

தயக்கத்தைத் தவிர்த்து - நம்பிக்கையின் துணையோடு - உறுதியாக வெற்றியை நோக்கி நடைபோட ஆரம்பியுங்கள். சந்தேகமில்லாமல் நிச்சயம் உங்களுக்கே வெற்றிகிட்டும்.

## நீங்கள் தயாரா?

நன்றி : இராமகிருஷ்ண விஜயம் !

> எங்கு உயர்ந்த உண்மைகள் நடைமுறையில் இருக்கிறதோ அந்தச் சமுதாயமே சிறந்தது.

# புத்தளம், குருநாகல் பிரதேச அறநெறிப்பாடசாலை ஆசிரியர் கருத்தரங்கு

புத்தளம், குருநாகல் மாவட்டங்களைச் சேர்ந்த அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று மார்ச் மாதம் 04 ஆம் திகதி சனிக்கிழமை சிலாபம் முன்னேசுவரம் ஸ்ரீ வடிவாம்பிகா தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் உடப்பூர் சோமாஸ்கந்தர், மலைமதி சந்திரசேகரன், எஸ். தெய்வநாயகம் (உதவிப்பணிப்பாளர் - ஆராய்ச்சி) ஆகியோர் விரிவுரையாற்றினர். திரு. வி. விக்கிரமராஜா(உதவிப் பணிப்பாளர் - நிர்வாகம்) அறநெறிப் பாடசாலைகளைப் பதிவுசெய்தல், மாணவர் வரவு இடாப்பு, நூல்களைக் கொள்வனவு செய்தல், கையாளுதல் தொடர்பாக விளக்கமளித்தார்.

முன்னேசுவரம் அருள்மிகு பத்திரகாளியம்மன் ஆலய தர்மகர்த்தா திருவாளர் காளிமுத்து லெட்சிராமனது ஆசியுரையுடன் தொடக்கிய இக்கருத்தரங்கில் திரு. வி. அளகேசன், திரு. அ. கனகரத்தினம், திரு. இந்திர மகேந்திரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

குருநாகல் பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சமய நூல்கள், மாணவர் பதிவேடு, ஆசிரியர் கையேடு பாடத்திட்டம் என்பனவும் இக்கருத்தரங்கின் போது வழங்கப்பட்டன.

அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் கற்பித்தலின் போது எதிர்கொள்ளும் பிரச்சனைகள், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் தம் வினைத்திறனை எவ்வாறு விருத்தி செய்து கொள்ளலாம் என்பன குறித்து பிரதிப் பணிப்பாளர் ஆசிரியர்களை குழுநிலையில் பிரித்து தகவல்களை திரட்டி அரங்கில் அவர்களுக்கூடாகவே வெளிக் கொணரச் செய்தது சிறப்பம்சமாகும்.

விழாவிற் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கு பஜனை, பிரார்த்தனை என்பனவற்றின் முக்கியத்துவம் எடுத்து விளக்கப்பட்டதுடன், பஜனைப்பாடல்களும் பண்ணோடு இசைத்து அறிமுகம் செய்யப்பட்டன.

இக்கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை கலாசார அலுவலர் மாத்தளை பெ. வடிவேலன் மேற்கொண்டிருந்தார்.

## " God " என்றால் என்ன?

இந்து மதக் கடவுள்களில் பிரம்மா - படைக்கும் கடவுள், விஷ்ணு - காக்கும் கடவுள், சிவன் - அழிக்கும் கடவுள் என்ற தத்துவத்தில் வழிபடுகின்றோம். இதைத் தெரிந்துதான் கடவுள் என்ற தமிழ் சொல்லுக்கு ஆங்கிலேயர் "God" என்று மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து ஆங்கிலப் பெயர் கொடுத்திருப்பாரோ என்று தோன்றுகிறது. எப்படி?

"G" என்றால் Generator அதாவது உற்பத்தி செய்தல்; " O " என்றால் Organiser அதாவது செய்ததை வழிப்படுத்தி நிலைக்கச் செய்தல்; "D" என்றால் Destroyer அதாவது அழித்தல். தீயோர்களை அழித்தல் என்று இதற்குப் பொருள் கொள்ள வேண்டும். மூன்று தொழில் அதிபர்கள் சேர்ந்த ஒரே பொருள் "God" என்றுங்கொள்ளலாம்.

- கல்லூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் புராணச் சொற்பொழிவில் குறிப்பிட்டது.

# அருள் கூட்டும் அறிவு

- திருமுருக கிருபானந்தவாரியார் -

குடத்தைப் பார்த்தவுடன், குடத்தை செய்தவன் ஒருவன் இருக்க வேண்டும் என்பது உறுதி ஆகிறது. உலகம் காரியப்பாடுடையது. காரியம், கர்த்தா இன்றி நிகழாது.

அதேபோல உலகைப் பார்க்கும் போது, உலகைப் படைத்த ஒரு பரம்பொருள் உண்டு என்று மதிப்பதுவே அறிவுடைமை. ஆனால் அது கண்களுக்கு தெரியவில்லையே என்று ஐயுறுவது மடமை.

"இரவில் ஆகாயத்தில் பல நட்சத்திரங்களைப் பார்க்கிறாய். ஆனால் சூரியன் உதித்ததும் அவை கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆதலால் பகல் நேரத்தில் நட்சத்திரங்களே இல்லை என்று சொல்லலாமா? மனிதனே! உனது அஞ்ஞான நிலையில் நீ இறைவனைப் பார்க்க முடியாததால் இறைவனே இல்லை என்று சாதிக்காதே" என்கிறார் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்.

மலரிலுள்ள மணம் கண்ணுக்குத் தோன்றுகிறதா? நெருப்பில் உள்ள சூடு கட்புலனுக்குத் தோன்றுகிறதா? கடலில் நீரிலுள்ள உப்பு கண்ணுக்குத் தோன்றுகிறதா? இல்லையே!

எனவே, உணர்வு விழியினால், உணரப்படுகிற பொருளே பரம்பொருள் என்றாகிறது. அந்த உணர்வு, உலக நிலையில் இருந்து நீங்கி, உலகை மறந்து, உள்ளத்தையும் மறந்து, உணர்வையும் மறந்து, உயிரையும் மறந்த போது அரும்புகிற ஒன்று. நூலறிவினால் வாலறிவனைக் காண இயலாது.

பாலில் நெய் இருக்கிறது; தெரியவில்லை. கண்ணுக்குத் தெரியாததால், பாலில் நெய் இல்லை என்றால் நம்மை அறிவுள்ள உலகம் பழிக்குமன்றோ?

ஆகவே, கடவுள் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் அருளோடு நீக்கமற நிறைந்திருக்கிறார். இது உறுதி, முற்றிலும் உண்மை.

உலகிலே இறைவன் எங்கும் நிறைந்திருப்பானானால், உலக மாயை அவனைப் பற்றாதா? பற்றாது. எதுபோல்?

"துன்பம், பாவம், வேதனை போன்றவை இந்த உலகில் இருக்கின்றனவே! அவைகளில் பாதிக்கப்படுபவர்கள் ஜீவர்களே தவிர பிரம்மம் அல்ல. பிரம்மம் இவைகள் எதனாலும் பாதிக்கப்படுவதில்லை. பாம்பின் வாயில் விஷமிருக்கிறது. அந்த விஷத்தால் மற்றவர் இறக்கிறார்களே தவிர, பாம்புக்கு ஒன்றும் நேர்வதில்லை. தன்னிடம் உள்ள விஷத்தினால் எந்தவித தீமையும் பாம்புக்கு உண்டாவதில்லை" என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியுள்ளார்.

"கடலில் பிறந்து, கடல்நீரைக் குடித்து, கடலிலேயே வாழ்கிற கடல்மீனில் உப்பு ஏறுவதில்லை. அதுபோல், உலகமெங்கும் நிறைந்திருக்கும் இறைவனை உலக மாயை பற்றுவதில்லை" என்கிறார் பாம்பன் சுவாமிகள்.

உலகக் காட்சி தெரிகிறவரை, கடவுள் காட்சி தெரியாது. கடவுள் காட்சி தெரிய ஆரம்பித்தவர்களுக்கு, உலகக் காட்சி தெரியாது.

"நாயைக் கண்டால் கல்லைக் காணோம், கல்லைக் கண்டால் நாயைக்காணோம்" என்பது நம் நாட்டுப் பழமொழி. நாயை அடிக்கக் கல் தேடுவது என்ற பொருளில் இந்தப் பழமொழி எழவில்லை.

ஒரு சிற்பி ஒரு வீட்டின் முகப்பில், கருங்கல்லில் நாய் செய்து வைத்தான். புதிதாக வந்த ஒருவர்; தொடக்கத்தில் நாய் என்று நின்றார். அறிவு தெளிந்தபிறகு "அது நாயன்று; கல்" என்று கண்டார்.

நாய் என்று கண்டபோது கல் தெரியவில்லை; கல் என்று கண்டபோது நாய் தெரியவில்லை. நாயும் அது தான் கல்லும் அது தான்.

அது போல் உலகம் என்று பார்த்தால், கடவுள் தெரிவதில்லை; கடவுள் என்று பார்த்தால் உலகம் தெரிவதில்லை.

மரத்தினால் யானை செய்து வைத்திருக்கிறது. கோயிலுக்கு வந்த ஒருவர் அதைப்பார்க்கிறார். யானை என்று பார்க்கிறார். அப்போது அவர் கண்ணுக்கு மரம் தோன்றுவதில்லை. மரம் என்று பார்க்கிறார். அப்போது யானை தோன்றுவதில்லை.

அதுபோல் பரம் (கடவுள்) என்று பார்த்தால், பார் (உலகம்) தெரிவதில்லை. பார் என்று பார்த்தால் பரம் தோன்றுவதில்லை.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே

- திருமந்திரம் -

முன்னாளில் யாழ்ப்பாணத்துக்கு கப்பலில் போவார்கள். அப்போது இந்தியக் கரை தெரிகிறவரை யாழ்ப்பாணக்கரை தெரியாது. யாழ்ப்பாணக்கரை தெரிந்த அந்தக் கணத்தில் இந்தியக் கரை தெரியாது. இரண்டு கரைகளும் தெரிகிற அளவில் ஒரு நடு இடம் கிடையாது. இரு கரைகளும் தெரியாத அளவிலும் ஒரு நடு இடம் கிடையாது. ஒரு கரை தெரிந்தால் மறுகரை தெரியாது.

அதுபோல்தான் பொருட்காட்சி தெரிகிற வரை அருட்காட்சி தெரியாது. அருட்காட்சி தெரிந்தபோது பொருட்காட்சி தெரியாது.

எனவே, அந்த அருட்காட்சியைக் காண விரும்புபவர்கள் சிறிது சிறிதாக உலகக் காட்சியை மறப்பதற்கு ஆன்மீக சாதனையின் மூலம் முயற்சி செய்யவேண்டும். அருட்காட்சி தியானம் முதலிய முயற்சியினால் கைகூடும்.

அருளால் கண்டால் அனைத்தும் ஒன்றாகத் தெரியும். அறிவால் கண்டால் காண்கின்ற தன்னையும் தெரியாது. அதுவே பேரானந்த நிலையாக முகிழ்க்கும்.

****

## மாத்தளை செய்திகள்

✣ மாத்தளை இரத்தோட்டை இந்து மகா வித்தியாலய அதிபர் திரு. எஸ். கணேஸ் அவர்களின் தலைமையில் மார்ச் மாதம் மேற்படி கலாசாலை உயர்வகுப்பு மாணவர்களுக்காக சிறுகதை பயிற்சிப் பட்டறையொன்று நடைபெற்றது. இப்பயிற்சிப்பட்டறையில் கலாசார அலுவலர் மாத்தளை பெ. வடிவேலன் கலந்து கொண்டு "மாணவர்களும் சிறுகதையும்" என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

✣ மாத்தளை ரத்வத்தை தமிழ் வித்தியாலயத்தில் உதவி ஆசிரியை செல்வி பாலரஞ்சனி சர்மா தலைமையில் மாத்தளை தமிழ் இலக்கிய வட்ட ஏற்பாட்டில் நடைபெற்ற சிறுகதை பயிற்சிப் பட்டறையில் கலாசார அலுவலர் மாத்தளை பெ. வடிவேலன் கலந்து கொண்டு மாணவர் மத்தியில் சிறுகதை எழுதுவது தொடர்பான பயிற்சியினை நடத்தினார். மாத்தளை தமிழ் இலக்கிய வட்ட செயலாளர் திரு. வி. நமசிவாயம் இதனை ஏற்பாடு செய்திருந்தார். கருத்தரங்கில் சூழலில் வழக்கிலுள்ள மலையக நாட்டார் பாடல்கள், கிராமியக் கலைகள் என்பன குறித்து மாணவர்கள் தேடல் முயற்சியில் ஈடுபடுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

**தகவல் - கலாசார அலுவலர், மாத்தளை.**

# அறநெறி எது ?

## அறநெறி:

மனிதன் தன்வாழ்வில் அடைய வேண்டிய பயன்கள் நான்கு என்பர். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாகும். இவற்றை முறையாகத் தெரிந்து கொண்டு அவற்றின் பயனை அடைவதற்கே நூல்களைப் படிக்கின்றோம். இக்கருத்தைத் தான் பவணந்தி முனிவர், "அறம், பொருள், இன்பம், வீடு, அடைதல் நூற்பயனே" என்று நன்னூலில் நவின்றுள்ளார். இந்நான்கினுள் வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின் துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாமையின் நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம். இதனால் உலக வழக்கில் நாம் அறிந்து அனுபவிக்கக் கூடியனவாக இருப்பவை அறம், பொருள், இன்பம், எனும் மூன்றுமேயாம். அறம் பொருள் இன்பமான மூன்றையும் அறிந்து அவற்றின் வழி நடத்தலே அறநெறி எனப்படுகின்றது. இதனைச் சேக்கிழார் பெருமான் மனுநீதி கண்ட சோழன் வரலாற்றில் அறிவிக்கின்றார்.

*"அறம்பொருள் இன்பமான அறநெறி வழாமற் புல்லி*
*மறக்கடிந் தரசர் போற்ற வையகம் காக்கும் நாளில்*
*சிறந்தநல் தவத்தால் தேவி திருமணி வயிற்றில் மைந்தன்*
*பிறந்தனன் உலகம் போற்றப் பேர்அரிக் குருளை அன்னான்"*

இப்பாடலிலுள்ள "அறம் பொருள் இன்பமான அறநெறி" எனும் வரி இங்கு சிந்திக்கத்தக்கது. அறமாவது, உலகிலுள்ள பொருள்களையும், இன்பங்களையும் தனக்கும் பிறருக்கும் தீங்கின்றி அனுபவிக்கச்செய்வது என்பதாகும். பொருளை ஈட்டுவதற்கும், இன்பத்தை அனுபவிப்பதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. ஆனால் அப்பொருளை ஈட்டுகிற பொழுதும், இன்பத்தை துய்க்கிறபொழுதும் தனக்கும் பிறர்க்கும் தீங்குவராமல் நடந்து கொள்வதே அறமாகும். இவ்வறத்தின் வழிப்பொருளை ஈட்டுதலும், அறத்தின் வழியே, இன்பம் துய்த்தலும் அறநெறி என்பது நம் சான்றோர்களின் கருத்தாகும். அது சேக்கிழார் வாக்காலும் தெளிவாகின்றது.

## ஔவை அறம்:

இவ்வறம், பொருள், இன்பம் என்பன பற்றி ஔவைப் பிராட்டியாரும் ஒரு பாடலில் விளக்குகின்றார். அறம் என்பது ஒரு மனிதன் தன்னிடத்திலுள்ள அறிவு ஆற்றலையும் தன்னால் ஈட்டப்பெறும் பொருளையும் மனமுவந்து தக்கார்க்கு ஈதல் என்று கூறுகின்றார். பொருள் என்பது, அறத்தின் வழியே, அதாவது தனக்கும் பிறர்க்கும் தீங்கின்றி ஈட்டுதலாகிய அறத்தின் வழியே சேமிப்பதாகும். இவ்வறத்தின் வழி வாராப் பொருள், கண்ணுக்குப் பொருளாகத் தோன்றினும், அது அறம் இன்பம் வீடு ஆகிய பயன்களைத் தாராது. ஆதலின், அப்பொருளைப் பொருளல்ல என்றனர் ஆன்றோர். இக்கருத்தைத் திருவள்ளுவரும்,

*"அருளொடும் அன்போடும் வாராப் பொருளாக்கம்*
*புல்லார் புறள விடல்"*

என்று கூறுகின்றார். தம்மிடத்து அன்பும், பிறரிடத்து அருளுங் கொண்டு

ஈட்டப்பெறும் பொருளே பொருள் என்பது வள்ளுவர் கருத்து. இக்கருத்தைத்தான் தனக்கும் பிறர்க்கும் தீங்கு வாராவகையில் ஈட்டப்பெறும் பொருளே பொருள் என்றனர் ஆன்றோர். இவ்வறத்தைச் சிந்திக்காமல் எப்படி எப்படி எல்லாமோ ஈட்டப்பெறும் பொருள் முடிவில் தமக்கும் பிறர்க்கும் நாட்டிற்கும் தீங்கினையே தரும் என்பதை அநுபவம் நமக்கு உணர்த்தி நிற்கிறது.

இன்பம் என்பது அறத்தின்வழி பெறும் இன்பமே இன்பமாய் அமையும். எனவே பொருளிற்கும் இன்பத்திற்கும் அறமே அடிப்படை என்பது தெளிவாகும். இக்கருத்தினையே புறநானூற்றுப் புலவர் கோவூர் கிழாரும்,

***"சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல"***
என்று கூறுகிறார்.

## பரனை நினைதலே அறம்:

அறத்தினை நன்குணர்ந்து அவ்வரத்தின் வழிப் பொருளை ஈட்டலும், இன்பத்தைத் துய்த்தலும் யாருக்கு வரும் எனின்? எப்பொழுதும் இறையுணர்வு உள்ளவர்கட்கே வரும் என்று ஔவைப் பிராட்டியார் கூறுகின்றார். கண்ணுக்கும் கருத்திற்கும் புலனாகும் இவ்வறம், பொருள், இன்பம் ஆன அறநெறிக்கு அடிப்படை, சாதாரண மனிதனின் கண்ணிற்கும் கருத்திற்கும் புலனாகாத இறையுணர்வே என்பது ஆன்றோர்களின் கருத்தாகும். இறையுணர்வில்லா அறம், ஊற்று இல்லாத ஓடையும், மணமில்லாத மலரும், அடித்தளமில்லாக் கட்டடமும் போல் நிலையான பயன் அற்றதாய் முடியும். இக்கருத்தில் தான் ஔவைப் பிராட்டியார், "பரனை நினைந்து" என்று கூறுகின்றார்.

"பரனை நினைந்து" எனும் சொற்களை இடைநிலைத் தீவகமாகக்கொண்டு, பரனை நினைந்து ஈதல் அறம், பரனை நினைந்து தீவினைவிட்டு ஈட்டல் பொருள், பரனை நினைந்து கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம் பரனை நினைந்து இம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு எனப்பொருள் கொள்ளத்தக்கது. பரனை நினையாமல் துறவும் கூடாது; வீடும் பெற இயலாது. எனவே பரனை நினையாவிடின் இவை எல்லாம் முழுமையான பயனைத்தரமாட்டா. இக்கருத்துக்களால் அறம், பொருள், இன்பம் எனும் மூன்றும் அறநெறி என்றும், இவ்வற நெறிக் கெல்லாம் அடிப்படையாய் உள்ள அறம், பரனை நினைதலே என்றும் உணர்ந்து கொள்ளலாம். ஆகவே எல்லாவற்றிற்கும் அடிப்படையாய் உள்ள அறம் இறையுணர்வு என்பது தெளிவாகும்.

***( "திருவருட்செய்தி" எனும் நூலிலிருந்து )***

****

சிரித்து முகமலர்ச்சியுடன் இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அதுவே வாழ்க்கைக்கு இனிமையையும், முயற்சிக்கு ஊக்கத்தையும் தரக்கூடியது.

# விற்பனைக்குள்ள நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கல்லெழுத்துக் கலை | - நடன காசிநாதன் M.A. | 80. 00 |
| 2. | யாழ்ப்பாண இராச்சியம் | - பதிப்பாசிரியர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் | 450. 00 |
| 3. | பண்டைய தமிழகம் | - கலாநிதி சி. க. சிற்றம்பலம் | 375. 00 |
| 4. | கோணமலை அந்தாதி | - (பதிப்பு) பண்டிதர் இ. வடிவேல் | 35. 00 |
| 5. | கோணேசர் கல்வெட்டு | - (பதிப்பு) பண்டிதர் இ. வடிவேல் | 60. 00 |
| 6. | பெரிய புராணம் ஓர் ஆய்வு | - பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் | 420. 00 |
| 7. | திரு அருட்பா இசைமாலை | - (பதிப்பு) டாக். நா. மகாலிங்கம் | 75. 00 |
| 8. | புதுவைக் கல்லறையில் புதிய மலர்கள் | - முருகு சுந்தரம் | 30. 00 |
| 9. | தமிழியல் ஆய்வு வரலாறு | - ம. மதியழகன் | 100. 00 |
| 10. | நவீன இலக்கியச் சிந்தனைகள் | - ம. மதியழகன் | 87. 50 |
| 11. | பொருள் கோள் | - ச. அரங்கராசன் | 68. 75 |
| 12. | தமிழ் உணர்ச்சி தமிழ் வளர்ச்சி தமிழ் ஆட்சி | - முனைவர், பொன் கோதாண்டராமன் | 37. 50 |
| 13. | முற்போக்கு இலக்கிய இயக்கங்கள் | - தொ. மு. சி. ரகுநாதன் | 37. 50 |
| 14. | பயன் முறைத்தமிழ் | - டாக். செள. மதார்மைதீன் | 55. 00 |
| 15. | நல்லதோர் வீணை | - தி. முத்துகிருஷ்ணன் | 50. 00 |
| 16. | இலக்கியமும் பண்பாடும் | - முனைவர். இ. சுந்தரமூர்த்தி | 40. 00 |
| 17. | வ. உ. சி. வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும் | - அறிஞர். அ. சங்கரவள்ளி நாயகம் | 120. 00 |
| 18. | திருக்கரந்தை ஆதிவராகப் பெருமாள் வருக்கக் கோவை | - உரையாசிரியர் சி. ஜெகந்நாதாசார்யர் | 30. 00 |
| 19. | பொய் + அபத்தம் -> உண்மை | - ராஜ் கெளதமன் | 80. 00 |
| 20. | மானிட தரிசனங்கள் | - எஸ். அகஸ்தியர் | 105. 00 |
| 21. | புதுக்கவிதையில் இலக்கிய இயக்கம் | - முனைவர் இரா. சம்பத் | 150. 00 |
| 22. | இடுக்கி மாவட்டப் பழங்குடி மக்களின் வழக்காற்றியல் | - டாக். நசிம்தீன் | 112. 50 |
| 23. | கண்காணிப்பின் அரசியல் | - ரவிக்குமார் | 120. 00 |
| 24. | சோழர்கால உற்பத்தி முறை - முதலிய கட்டுரைகள் | - தொகுப்பாசிரியர் வெ. கிருஷ்ணமூர்த்தி | 120. 00 |
| 25. | இந்திய அரசமைப்பு | - வே. தில்லைநாயகம் | 125. 00 |
| 26. | பூநகரி தொல்பொருளாய்வு | - ப. புஷ்பரட்ணம் M.A. | 450. 00 |
| 27. | புதுக்கவிதையில் சமுதாயம் | - டாக். வீ. உண்ணாமலை | 150. 00 |
| 28. | வேளாண்மைப் பல்கலைக்கழகம் | - சோமலெ லெ. சோமசுந்தரம் | 62. 50 |
| 29. | வ. சுப. மாணிக்கனாரின் வாழ்வும் பணியும் | - பதிப்பாசிரியர் டாக். ச. மெய்யப்பன் | 17. 00 |
| 30. | இந்த நூற்றாண்டுச் சிறுகதைகள் | - தொகுப்பு :- விட்டல் ராவ் | 150. 00 |

**இவற்றுடன் ஆன்மீக, தமிழ்த்துறை சார்ந்த நூல்கள், திணைக்கள வெளியீடுகள் என்பன திணைக்கள விற்பனை நிலையத்தில் விற்பனைக்குள்ளன. காரியாலய நாட்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.**

*Printed at Spartan Graphics (Pvt) Ltd. 154, Wolfendhal Street, Colombo 13. Tel : 323638 328017*

## O. S. S

To :

Colombo Tamil Association
7, 57th Lane,
Colombo 6.

7, 57th Lane
Colombo 6

From :

The Director,
**Department of Hindu Religious & Cultural Affairs**
98, Ward Place,
Colombo - 7.